இதழ் 369
13 டிசம்பர் 2025
21 பக்கங்கள்

# இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

youtube.com/@IlakkuWeb2.0
facebook.com/ilakku.ilakku.10
twitter.com/Ilakku1




## தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் ௧௯வது ஆண்டின் நினைவு வணக்கம்



# பூகோளப்போட்டியால் குவியும் நிவாரண உதவிகள்

விதுரன்



# பூட்டீனின் இந்திய பயணமும் பறிபோன பலாலி வான்படைத்தளமும்

வேல்ஸில் இருந்து அருஸ்



© 2025 இலக்கு இணையம்

## நிவாரணப் பொருட்களுடன் திருகோணமலையில் அமெரிக்க விமானம் !

அமெரிக்கவிமானப்படையின் விமானம் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருகோணமலை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண பொருட்களுடன் சீனன்குடா விமான நிலையத்தில் தரை இறங்கியுள்ளது.

இலங்கையின் பேரிடர் நிவாரண உதவிகளை விரைவாக இலங்கை முழுவதும் வழங்கும் திட்டத்தின் கீழ் இவ் விமானம் மூலம் நிவாரணப் பொருட்கள் எடுத்து வரப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் டிற்வா புயல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு கிண்ணியா, மூதூர், வெருகல் பகுதிகளின் இடைத்தங்கல் முகாம்களில் இருந்து வீடு திரும்பிய 250 குடும்பங்களுக்கு நிவாரணப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது.



அவுஸ்திரேலிய உதவி திட்டம், இங்கிலாந்து உதவித் திட்டம், யுனிசெப் மூலம் வழங்கப்பட்ட நிவாரண பொருட்களே இவ்விமானத்தில் எடுத்து வரப்பட்டிருந்தது. இந்த நிவாரண உதவிகளை அகம் மனிதாபிமான வள நிறுவனம் விருத்திவலையமைப்புடன்இணைந்து உரிய இடங்களுக்கு வழங்கின.

மாவட்டத்தில் கிண்ணியா, மூதூர், வெருகல் பிரதேசசெய

தொடர்ச்சி 20ஆம் பக்கம்

## ஊழலுக்கு எதிரான போராட்டம் பல்கேரியா அரசு கவிழ்ந்தது



நாடு முழுவதும் நடந்த ஊழல் எதிர்ப்பு போராட்டங்களைத் தொடர்ந்து கடந்த வியாழக்கிழமை(11) பல்கேரியாவின் அரசாங்கம் தனது ராஜினா மாவை அறிவித்துள்ளது. ஆறாவது நம்பிக்கையில்லா வாக்கெடுப்பை எதிர்கொண்ட பிறகு, தானும் தனது அமைச்சரவையும் பதவி விலகுவதாக பிரதமர் ரோசன் ஜெலியாஸ்கோவ், தெரிவித்துள்ளார்.

ஜனவரி 1 ஆம் திகதி பல்கேரியா யூரோ மண்டலத்தில் சேர சில வாரங்களுக்கு முன்பு இந்த அறிவிப்பு வந்துள்ளது. அரசாங்கம் முன்னர் யூரோக்களில் வரைவு செய்யப்பட்ட சர்ச்சைக்குரிய 2026 பட்ஜெட்டை முன்மொழிந்தது, அதில் அதிக வரிகள் மற்றும் அதிகரித்த சமூக பாதுகாப்பு பங்களிப்புகள் அடங்கும்.

ஆனால், அரசாங்கம் ஊழல் செய்ததாக ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றம் சாட்டினர் மற்றும் அடுத்தடுத்த தலைமைகள் அதை நிறுத்தத் தவறியதில் விரக்தியடைந்ததால், இந்த மசோதா பல வாரங்களாக

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

## இலங்கையின் 30% நிலப்பரப்பு மண்சரிவு அபாய வலயமாக அடையாளம்!

இலங்கையில் தற்போது 14 மாவட்டங்கள் மண்சரிவு ஏற்படக்கூடிய அபாயத்தைக் கொண்டிருப்பதாகத் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.



ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அந்த நிறுவனத்தின் மூத்த புவியியலாளர் கலாநிதி வசந்த சேனாதீர,நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 30% மண்சரிவு ஏற்படக்கூடிய பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அவ்வாறு அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் நாட்டின் மொத்த சனத்தொகையில் 34% மக்கள் வசிக்கின்றனர் என்றும்,அந்த நிலப்பரப்பு சுமார் 20,000 சதுர கிலோமீற்றர் வரை பரந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

‘டிற்வா’ புயலைத்தொடர்ந்து பெய்த கடும் மழையினால் மண்சரிவு ஏற்படக் கூடிய இடங்களைப் பரிசோதிக்குமாறு 2,710 கோரிக்கைகள் கிடைத்துள்ளன என்றும், அவற்றில் 589 இடங்கள் இதுவரை பரிசோதிக்கப்பட்டு முடிந்துள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட இடங்கள் தொடர்பாகப் பெறப்பட்ட செய்மதி புகைப்படங்களின்படி, 10 மீற்றருக்கும் அதிகமாக மண்சரிவு ஏற்பட்ட 1,241 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் வீடுகளுக்குப் பாதிப்பில்லாத 919 இடங்களும், வீடுகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்திய 322 மண்சரிவுச் சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்குப் பெறப்படும் உடனுக்குடனான தகவல்களின் அடிப்படையில், அபாயகரமான

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## இஸ்ரேலியர்களை நாடு கடத்தியது கானா

இந்த வார ஆரம்பத்தில் டெல் அவிவ் அதிகாரிகளால் மேற்கு ஆப்பிரிக்க நாட்டிலிருந்து சென்ற பயணிகள் “மோசமாக நடத்துதல் மற்றும் நியாயமற்ற முறையில் நாடுகடத்தல்” போன்றவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவித்து கானா மூன்று இஸ்ரேலிய நாட்டினரை நாடு கடத்தியுள்ளது.

இஸ்ரேலில் நடந்த சைபர் பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொண்ட நாடாளுமன்றக் குழுவின் நான்கு உறுப்பினர்கள் உட்பட ஏழு கானா நாட்டினர் டிசம்பர் 7 அன்று பென் குரியன் விமான நிலையத்தில்



“நியாயமான காரணமின்றி” தடுத்து வைக்கப்பட்டனர். “ஐந்து மணி நேரத்திற்கும் மேலான கடுமையான இராஜதந்திர தலையீட்டிற்குப் பிறகுதான் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். மீதமுள்ள

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

## மக்களின் அரைப் பங்கினரின் சொத்தை கொண்டுள்ள 0.001% செல்வந்தர்கள்



உலகளாவிய சமத்துவமின்மை “தீவிர” மட்டங்களில் உள்ளது, 60,000க்கும் குறைவான செல்வந்தர்கள் (மல்டி-மில்லியனர்கள்), அதாவது மொத்த மக்கள் தொகையில் 0.001% உள்ளவர்கள் இப்போது உலகின் 50% மக்களின் செல்வத்தை விட மூன்று மடங்கு அதிக செல்வத்தை கொண்டுள்ளனர் என்று உலக சமத்துவமின்மை அறிக்கை 2026 தெரிவித்துள்ளது.

200க்கும் மேற்பட்ட ஆராய்ச்சியாளர்களால் தொகுக்கப் பட்டு

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

## வெளிநாடுகளுடனான சீன மக்கள் நட்புறவுச்சங்கம் இலங்கைக்கு நிதியுதவி

இலங்கை மக்களுக்கு அவசியமான நிவாரண உதவிகளை வழங்குவதற்கென வெளிநாடுகளுடனான சீன மக்கள் நட்புறவுச் சங்கத்தினால் 580,000 ஆர்.எம்.பி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

டிற்வா சூறாவளி காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு அனர்த்தங்களில் சிக்கிப் பல நூற்றுக்கணக்கானோர் பலியாகியிருப்பதுடன், இலட்சக் கணக்கானோர் தமது இருப்பிடங்களையும் வாழ்வாதாரத்தையும் இழந்து வெகுவாகப் பாதிக்கப் பட்டுள்ளனர்.



இந்நிலையில் சர்வதேச நாடுகள், அரச சார்பற்ற அமைப்புக்கள், தனியார் நிறுவனங்கள் எனப் பல்வேறு தரப்பினரும் பல வழிகளிலும் இலங்கைக்கு உதவிகளை வழங்கிவருகின்றனர்.

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

## பாகிஸ்தானுடன் நெருக்கமாகும் அமெரிக்கா – இந்தியாவுக்கு பதிலடி

பாகிஸ்தானின் F-16 போர் விமானங்களுக்கான தொழில்நுட்பம் மற்றும் ஆயுதங்களை விற்பனை செய்வதற்கு அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளதாக பாகிஸ்தானின் வலைத்தளமான டான் புதன் கிழமை(10) செய்தி வெளியிட்டுள்ளது.

கடற்படைக்கான எப்-16 விமானங்களின் விற்பனை மற்றும் தரமுயர்த்தல்கள் என்பன பாகிஸ்தான் கடற்படையை



நவீனமயமாக்குவதையும் செயல்பாட்டு பாதுகாப்பு தேவைகளை நிவர்த்தி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது என்று

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

## எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் எங்கள் மலையக மக்களை!

பா. அரியநேத்திரன்

200, வருடமாக இலங்கையில் வாழ்ந்து நாட்டின் பொருளாதார வளத்துக்கு அத்திவாரம் இட்டுவரும் மலையக தமிழ் உறவுகளின் அவலங்கள் வார்த்தைகளால் வர்ணிக்கப்பட முடியாது.



"மழை விட்டாலும் தூவானம் போகவில்லை" என்பதைப்போல் வெள்ளம் சூறாவளி இல்லை எனினும் மீளவும் தொடர்ச்சியாக மண்சரிவு அபாயம் ஏற்படும் நிலை உள்ளது.

எங்கு எப்போது எப்படி மண்சரிவுகள் ஏற்படும் என்பதை திட்டமிட்டு கூறமுடியாமல் மலையக மக்களை மீளவும் அவர்கள் வாழ்ந்த அதே இடத்தில் குடியேறுவதற்கான சமாந்திரமான சமநிலை காணிகள் மலையகத்தில் கூடிய வரை இல்லை அதனால் அரசாங்கம் வீட்டு திட்டம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கினாலும் அச்சம் இன்றி இயற்கை அனர்த்தம் இன்றி மண்சரிவுகள் இன்றி நிம்மதியாக வீடுகளை அமைத்து வாழக்கூடிய சூழல் அறவே அங்கில்லை.

மலையகமக்களை மீண்டும் அதே இடத்தில் குடியமர்த்துவது என்பது அவர்களை பலிக்கடாக்களாக மாற்றுவதாகவே அமையும் எனவே வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரச காணிகளை ஒதுக்கி தனித் தனியான வீட்டுத்திட்டங்களை ஏற்படுத்தி மலையகத்தில் ஆபத்தான இடங்களில் உள்ள மக்களை இடம் பெயர்வு செய்து உயிரை பாதுகாக்கவேண்டியது ஆட்சியாளர்களின் கடமையாகும்.

இதற்கு மலையக அரசியல் வாதிகள் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும். தமது வாக்கு வங்கி அரசியலுக்காக மலையக மக்களை மீண்டும் அதே இடங்களில் குடியமர்த்துவது தமது தலையில் தாமே மண்ணை தூவுவதற்கு ஒப்பானதாகும். கடந்த காலங்களில் பலதடவைகள் இவ்வாறு மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

2013, ஜனவரி,13,, மத்திய மாகாணத்தில் கண்டி, நுவரெலியா, மாத்தளை மற்றும் ஊவா மாகாணம், பதுளை மாவட்டத்திலும் மண் சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

2014,அக்டோபர் ,29,ல், ஊவா மாகாணம் பதுளை மாவட்டம், ஹல்துமுல்ல பிரதேச செயலகப்பிரிவு, கொட்டபத்ம கிராம அலுவலர் பிரிவு கொஸ்லந்தை நகருக்கு உட்பட்ட மீரியபெத்த தோட்டத்தில் பாரிய மண்சரிவு ஏற்பட்டு 38 பேர் உயிரிழந்தனர்.

2015,செப்டம்பர்,28, கொத்மலை, துல்கிரி, பண்ணல பகுதிகளில் பாரிய மண்சரிவுகள் ஏற்பட்டு 188 பேர் இடம்பெயர்ந்தனர், 2017 மே மாதம் வரை பலத்த மழை காரணமாக நுவரெலியா மாவட்டத்தில் உள்ள அம்பகமுவ, கொத்மலை, நுவரெலியா போன்ற இடங்களில் 269 குடும்பங்களைச் சேர்ந்த 1089 பேர் பாதிக்கப்பட்டிருந்தார்கள்.

2023, அக்டோபர், 28ல் பதுளை, நுவரெலியா, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய பிரதேசங்களில் 13,000 சதுர கிலோமீற்றர் நிலப்பகுதியில் மண்சரிவு அபாயம் காணப்படுதாக ஆய்வில் தெரிய வந்தது.

2025, நவம்பர்,26, தொடக்கம் தற்போது டிசம்பர் 13, வரை மலையகப் பகுதிகளில் எந்த நேரத்திலும்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

ஆசிரியர் தலையங்கம்

இலக்கு

## இறைமை மறுப்பால் மனித உரிமைகள் இழப்பு இது இன்றைய உலகின் அரசியல் வழமையாகிறது

ஐக்கிய நாடுகள் சபையின் 77 வது அனைத்துலக மனித உரிமைகள் நாள் 10.12.2025இல் "எங்கள் நாளாந்த இன்றியமையாதன மனித உரிமைகள்" என்ற மையக்கருத்துடன் முன்னெடுக்கப்பட்டது. எவ்வாறு உணவு நீர் காற்று எங்கள் நாளாந்த உயிர் வாழ்தலுக்கு இன்றியமையாதனவாக உள்ளனவோ அவ்வாறே மனித உரிமைகளும் நாளாந்த வாழ்வுக்கு இன்றியமையாதன. ஆதலால் ஒவ்வொருவரும் மனிதஉரிமைகளை நிலைப்படுத்தும் கடமையுள்ளவர்கள் என்பதை ஐக்கியநாடுகள் சபை மக்கள் மயப்படுத்தியுள்ளது. ஆனால் 1948 இல் மனித உரிமைகள் சாசனத்தை வெளியிட்ட ஐக்கிய நாடுகள் சபையே இன்றைய உலகில் நாளாந்த வாழ்வின் இன்றியமையாததாக மக்கள் மனித உரிமைகளை முன்னெடுப்பதற்கு எந்த விதமான உடன் பாதுகாப்பையும் கொடுக்க இயலாத அமைப்பாக நடைமுறையில் உள்ளது. இதற்குக் காரணம் பெரும்பாலும் நாட்டில் உள்ள மக்களுக்கு ஆளும் ஆட்சியாளர்கள் மண்ணின் மேலான இறைமையை மறுக்கின்றபோதே மக்கள் சனநாயக வழிகளிலோ அல்லது ஆயுத எதிர்ப்பாலோ அதனை எதிர்த்துப் போராடுகின்றனர். இவர்களை ஆட்சியாளர்கள வன்முறைக்கு உள்ளாக்கியும் சித்திரவதைப்படுத்தியும், இனஅழிப்பு, இனத்துடைப்பு பண்பாட்டு இனஅழிப்புக்கு உள்ளாக்கி விட்டுத் தங்கள் செயற்பாடுகளை நாட்டின் இறைமைக்கும் ஒருமைப்பாட்டுக்குமுரிய தேசிய பாதுகாப்புச் செயற்பாடென்றே நியாயப்படுத்தி அனைத்துலகச் சட்டங்களிலிருந்து தப்பித்துக்கொள்கின்றனர்.

ஈழத்தமிழர்களுடன் தொடங்கப்பெற்ற இந்த இனஅழிப்பை தேசிய பாதுகாப்பு நடவடிக்கை என்பதை உலகமேற்கும் புதிய அரசியல் முறைமை இன்று உலக முறைமையாகவே மாறியுள்ளதை அனைவரும் அறிவர். இந்நிலையில் "எங்கள் நாளாந்த இன்றியமையாதன மனித உரிமைகள்" என்பதை எப்படி ஒவ்வொருவரும் நடைமுறைப்படுத்துவது என்பதே இன்றுள்ள கேள்வி.

இந்த மண் எங்களின் சொந்த மண் என்ற மக்கள் இறைமையை நாடுகளின் இறைமை போலவே ஐக்கியநாடுகள் சபையில் பிரதிநிதித்துவப்படுத்தும் முறைமைகள் தோற்றுவிக்கப்பட்டாலே மனித உரிமைகள் நாளாந்த வாழ்வுக்கு இன்றியமையாதன என்பது நடைமுறைச்சாத்தியமாக முடியும் என்பது இலக்கின் எண்ணமாகவுள்ளது. முறைமைகளின் வழி இயங்கும் இன்றைய உலகில் மக்கள் இறைமைக்கான தேசியங்களின் சபை அமைக்கப்பட வேண்டும் என்பது ஐக்கியநாடுகள் சபைக்குச் சீர்திருத்தம் கோருபவர்களின் நீண்டகால முன்மொழிவாக உள்ளது. ஆயினும் இதுவரை இது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

மேலும் இந்த மண் எங்களின் சொந்த மண் என்ற உணர்வுடன் எங்களுடைய முன்னோர்களின் உயிர்த்தியாகங்கள் அர்ப்பணிப்புக்களின் பயனாகவே நாம் இந்த மண்ணில் வாழ்கின்றோம். ஆதலால் அவர்களின் உயர்ந்த நோக்குகளை நாமும் நமது அர்ப்பணிப்புக்களுடன் கூடிய வாழ்வால் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மக்களை ஒருங்கு சேர வைக்கும் உள்ள உறுதியே தேசியம். இந்த உள்ள உறுதியை நடைமுறைப்படுத்த மக்கள் தங்கள் அரசியல் எதிர்காலத்தைத் தாங்களே அமைக்கும் உரிமையே தன்னாட்சி உரிமை. இதனால்தான் மக்கள் இறைமையை நடைமுறைப்படுத்தும் முறைமைக்கான அடிப்படைகளாக தாயகம் தேசியம் தன்னாட்சி என்ற மூன்றும் அமைகின்றன.

இது எமது தாயகம். இது எமது தேசியம். எமது தாயகத்தில் எமது தேசியத்தின் வழி எமது எதிர்காலத்தை பாதுகாப்பான அமைதி வாழ்வுக்கும் வளரச்சிகளுக்குமானதாக நிர்ணயிப்பது என்பது மக்களின் பிரிக்க இயலாத உரிமை என்பதே அரசியலில்; தன்னாட்சி உரிமைக்கான விளக்கம். தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் நாம் பிறந்த நாட்டுக்குள் காணப்படும் மற்றைய தேசியத்தவர்களுடன் இணைந்து தங்களின் பாதுகாப்புடனான அமைதிக்கும் வளரச்சிக்கும் தங்களை ஆட்சிப்படுத்த மக்கள் தங்கள் தன்னாட்சியை உள்ளக தன்னாட்சியாக மாற்றுவதால் சனநாயக அரசாங்கங்கள் அமைகின்றன. இந்த பாதுகாப்புடனான அமைதி வளர்ச்சி என்பவற்றை அமைக்கப்பட்ட அரசாங்கம் உறுதிப்படுத்தாவிட்டால் நாம் உலகின் குடிகள் என்ற வகையில் உலக மக்களையும் அவர்களின் நாடுகளையும் அவற்றின் அனைத்துலக அமைப்புக்களையும் எமக்கான தன்னாட்சியை உறுதிப்படுத்துமாறு கோருவதற்கான அனைத்துலக உரிமையே வெளியக தன்னாட்சி.

இன்று தேசிய மக்கள் சக்தி இந்த வெளியக தன்னாட்சி உரிமையை ஈழத்தமிழர்களுக்கு இல்லாது செய்வதற்கு கடந்த சிங்கள அரசாங்கங்கள் திட்டமிட்டு உருவாக்கிய ஏக்கிய ராஜ்ஜிய என்ற ஓரே இராச்சியம் என்ற சிங்கள பௌத்த நாடு இலங்கைத் தீவு என்பதை இயற்கை அனர்த்தங்களுக்கு மத்தியிலும் மௌனமாக புதிய அரசியலமைப்பாக மாற்றுவதற்கு முயற்சிக்கிறது. எனவே "எங்கள் நாளாந்த இன்றியமையாதன மனித உரிமைகள்" என்பதை நடைமுறைப்படுத்த விரும்பும் ஈழத்தமிழர்கள் இந்த ஏக்கிய இராஜ்ஜியம் குறித்த கருத்தரங்குகள் மாநாடுகள் என்பவற்றை நடாத்தி தங்களின் மனித உரிமைகளைக் காக்க முயற்சிக்க வேண்டுமென்பது இலக்கின் கருத்தாக உள்ளது.

மேலும் வடமாகாணத்தில் அதிக மழை பெய்தலும் டிசம்பர் ஜனவரி மாதங்களில் எதிர்பாராத நேரத்தில் தாழ்வு அமுக்கம் ஏற்பட்டு மீண்டும் புயல்கள் ஏற்படலாம் எனவும் அனர்ந்த முகாமைத்துவ நிலையம் அறிவிப்புச் செய்துள்ளநிலையில் உலகநாடுகளில் வாழும் ஈழத்தமிழர்கள் தாயகத்துக்கான உதவிப்பணிகளையும் அனர்த்த முகாமைத்துவத் திட்டமிடலையும் தம்மாலான அளவுக்கு முற்திட்டமிட வேண்டிய காலமிது என்பதை முதலில் இலக்கு எடுத்துரைக்க விரும்புகிறது.

இத்தகைய இயற்கை அனர்த்தங்களையும் போரையும் தொடர்ந்து எதிர்கொள்ளும் வாழ்வாக இன்றைய வாழ்வு மாறிவிட்ட சூழலில் மக்களின் குடிசார் அமைப்புக்களும் மக்களிடை கட்டமைக்கப்படும் பொருளாதார அமைப்புக்களுமே மக்களின் நாளாந்த வாழ்வை முன்னெடுக்க அரசியல் கட்சிகளை விட முக்கியத்துவம் வாய்ந்தனவாக மாறிவிட்டன. இப்படியான மக்கள் குடிசார் சமுகங்களின் ஒன்றியம் மக்கள் இடையிலுள்ள பொருளாதாரக்கட்டமைப்புக்களின் ஒன்றியம் இவை மூலம் பிரச்சினைகள் எதிர்கொள்ளப்பட்டாலே அறிவார்ந்த முறையில் பிரச்சினைகளை அணுக முடியும். அவ்வாறே ஐக்கிய நாடுகள் சபைக்கோ நாடுகளுக்கோ ஒரே குரலில் கோரிக்கைகளை முன்வைக்க முடியும்.

உதாரணமாக ஆற்றலுள்ள குடிசார் அமைப்புக்களின் இன்றைய தேவைக்கு சிறு உதாரணம் வருமாறு:- யாழ்ப்பாணத்தில் இருந்து சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் ஆறுதிருமுருகன் அவர்கள் மலையக மக்களது இறைமையை இழக்க வைக்கக் கூடிய கருத்தான " எல்லாக் கோயில் காணிகளிலும் எல்லாச் சிதம்பரத்துக் காணிகளிலும் எல்லாத் தர்மக்காணிகளிலும் மலையக மக்களைக் குடியேற்றி அவர்களைக் காப்பாற்ற வேண்டும். அவர்கள் இங்க வந்தால் விவசாயம் செழிப்பாகும்" என்ற அவசர உணர்வு பூர்வமான கருத்தை வெளியிட தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவரும் ஆதரிக்க சுமந்திரன் தமிரசுக்கட்சியின் சார்பில் பாசத்துடன் குடியே வாருங்கள் என அழைப்பு விடுத்தார்.

இந்நிலையில்தான் சமநீதிக்கான செயற்பாட்டாளரும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை சக்திவேல் அவர்கள் மனிதாயத்துக்காகப் பாடுபடும் குடிசார் அமைப்பினைக் கொண்டிருப்பதால் – "இயற்கை அனர்த்தங்களை பயன்படுத்தி ஆட்சியாளர்கள் மலையக மக்களை வேறு இடங்களில் குடியமர்த்த எடுக்கும் முயற்சிகளுக்கு எந்த வகையிலும் எவரும் இடமளிக்காதிருப்பதோடு அவர்களின் அரசியல் பாதுகாப்பு மிகு எதிர்காலம் கருதி மலையகத்துக்குள்ளேயே அவர்களின் வாழ்வியலை உறுதிப்படுத்த வடக்கு கிழக்கு மலையக மக்கள் ஒன்றுபட்டு மலையகமே மலையக மக்களின் தாயகம் அங்கு சலுகைகளோடு மட்டுமல்ல மண்ணுரிமையோடு வாழ்வதே அரசியல் கௌரவம் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்" என்று அறிக்கை மூலம் எதிர்வினையாற்ற முடிந்தது என்பதை இலக்கு அனைத்துலக ஈழத்தமிழர்களுக்கும் உலகத் தமிழர்களுக்கும் கவனப்படுத்த விரும்புகிறது.

இந்நேரத்தில் புலம்பெயர் நாடுகளில் ஈழத்தமிழ் இளையவர்கள் தளிர்கள் அமைப்பின் மூலம் மலையக மக்களின் நாளாந்த வாழ்வை கூடிய விரைவில் அவர்கள் வாழ உதவும் வகையில் திரும்ப உதவக் கூடிய அவசியமான பொருட்களை மலையகத்துக்கு அனுப்ப விரைவாகச் சேர்த்து வருவது இளைய ஈழத்தமிழர்கள் வடக்கு கிழக்கு மலையக தமிழர்களை ஒரே தமிழினத்தின் உறவுகளாவே பார்க்கின்றனர் என்பதை உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளதை இவ்விடத்தில் இலக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறது. இவ்வாறே சிங்களக் குடியேற்றங்களையும் இயற்கை அனர்த்த மறுவாழ்வு என்ற போர்வையில் ஈழத்தமிழர் தாயகப் பகுதிகளில் கட்டமைக்கும் ராஜதந்திர முயற்சிகள் குறித்தும் அனைத்துத் தமிழர்களையும் உங்கள் உங்கள் குடிசார் அமைப்புக்கள் வழி தடுத்து நிறுத்த முயற்சிக்குமாறு இலக்கு அழைக்கிறது. இவற்றை மக்கள் சார்பாக நடைமுறைப்படுத்த பொருளாதாரப்பலத்தை மக்களுக்கு அளிக்க வல்ல பலமான பொருளாதார வர்த்தக கட்டமைப்புக்களின் அவசியத்தையும் இவ்விடத்தில் இலக்கு வலியுறுத்த விரும்புகிறது.

ஆசிரியர்

# பாலா அண்ணனின் 19வது ஆண்டு நினைவாக....

அ. சுரேஷ் ( மன்னார்)

போரின் இடையே தேசத்தின்குரல் அவரது அமைதியிலும், தொண்டைச் செருமலிலும்கூட அவிழ்க்க முடியாத அரசியல் முடிச்சு இருக்குமோ என,சிறிலங்கா அரசியலாளர்களையும், அரசியல் நலன் விரும்பிகளையும்தடுமாறவும், மறுபடி மறுபடி பரிசீலிக்கும் நிர்ப்பந்தத்திலும் விழுத்திவிடும் வலிமை வாய்ந்த விடுதலைக் குரலாக பாலா அண்ணனின் குரல், எம்மோடு இருந்தது.எம்மை சத்திய அரசியலில் நெறிப்படுத்தியது.



எக்கணத்திலும் உயிருக்கு, உத்தரவாதம் இல்லாத கொடிய போர் நாட்களில்... உடல் சிதறி உயிர்கள் பறிபோகும் உடமைகள் சுக்குநூறாகி நாசமாகும்.

இவ்வாறே மரணமுகில் உலாவும் சவால்கள் மிகுந்த தேசத்தில், எதிர்பாராத திருப்பங்களும் வருவதுண்டு.

ஈழநாதம், உதயன் புலிகளின் குரல் வானொலி ... பாலா அண்ணன் வருகை பற்றிய செய்தியை அறிவிப்புச் செய்யும். அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் என்ற ஒற்றை மனிதரின் பெயரானது மந்திர மருந்தாக தாயக மக்களையும், தாயக மண்ணையும், அதன்சுவாசமண்டலத்தையும் இளந்தென்றலாக வருடிச்செல்லும்.

தேசத்தின் குரல் வருகையானது எத்தனை தெய்வீக வெளிச்சம் படரும் ஒரு சூழலை தரும். அந்தவெளிச்சத்தின் இதமான சிலிர்ப்பை மகிழ்ந்து அனுபவிக்காமல் எவரும் இருந்ததில்லை.

விளக்கு எரிக்கும் எண்ணை, தென்பகுதியை விட நாலுமடங்கு விலை அதிகமாக இருந்தாலும், ஒவ்வொரு வீட்டிலும் விளக்கு எரியும் சாத்தியம் நிகழும்.



கண்ணில் படாத பாதுகாப்புப் பெருஞ்சுவர் ஒன்று அரணமைத்திருப்பது போன்ற மன ஆற்றுகையினை அவரது இருப்பு தாயகத்தில் ஆகர்சித்து நிற்கும். அத்தகைய போராட்ட வாழ்வும்,வரலாறும் நாளைய கனிகளை பெற்றுக்கொடுக்கும் வழிகாட்டியாக கைக்கொள்ளல் அவசியமாகிறது.

பாலா அண்ணன் என்ற சமாதான பீனிக்ஸ்சின் சிறகுகள் அத்தனை வீரியம் மிக்க தாய் விரியும். உள்ளிருந்தும், உடனிருந்தும் உணர்ந்தவர்களால் மட்டும் புரிந்துகொள்ளும் தெய்வீக ஈர்ப்புச் சக்தி அதற்கு உண்டு.

எமது தலைவரின் இதயத்தை எத்தனை காலம் ஆற்றுப் படுத்தியிருப்பார். அவரதும், மூத்த தளபதிகளினதும் பரஸ்பரம் தோழமைச் சிறப்பையும், பாசப்பிணைப்பினையும் ஒரு பொழுதாவது அந்த கணத்தின் இனிமையை கண்டு உணர்ந்திருக்க வேண்டும். உலகத்தையே வென்று தீர்க்கும் உளவுரண் பற்றிப்பிடிக்கும் தருணங்கள் அவை.

போரினில், முதுகுவடம் பாதிப்புற்ற சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி வீரன்கூட எழுந்து உட்கார முயற்சிப்பான். விழுப்புண் பெற்ற மாலதி,சோதியா படையணியின் பெண் போராளிகள் வலி நீங்கியவர்களாக கொண்டாட்ட மனநிலைக்குத் திரும்புவர்.



திருமணத்திற்கு நாள் குறித்த சகோதரி ஒருவர், கிட்டுப்பீரங்கிப் படையணியில் இருக்கும் தனது தம்பி, தனது திருமணத்திற்கு எப்படியும் வந்திடுவான் என்று அழகிய மகிழ்ச்சியைத் தருவிப்பாள். ஆனந்த மிதப்பில் திருமணக் களையாக அது மாறிவிடும்.

இவ்வாறே மனக் களைதனை ஒற்றி, ஆற்றியெடுக்கும் உச்சரிப்புச் சொல் பாலா அண்ணன். அதுவே தேசத்தின் குரல். புதிய மீன்பிடி வலைகள் எடுத்து, நிதானமாக வலைக் கண்ணிகள் எண்ணி, மாட்டுக்கட்டி, மிதப்புக்கட்டி, கல்லுகட்டி உற்சாகமாய் வலை வேலை பார்ப்பர். சகமீனவ தொழிலாளி நண்பர்களோடு சம்மாட்டிமார் உற்சாகம் கொள்வார்கள்.

புத்தம்புது உழுபொறி வாங்க , மனைவியின், தம்பிள்ளைகளின் நகைகளைத் துணிந்து அடகு வைப்பர் விவசாய மக்கள்.



மரக்கறி,மீன் சந்தைகள் கடைத்தெருக்கள் யாவும், திருநாள் சிறப்பை நினைவில் கொண்டு வரும். வைப்பகம், சுவையூற்று, இளந்தென்றல், மருதம், நெய்தல், வெதுப்பகம் என தூயதமிழில், பெயர்ப் பலகைகள் பளிச்சென்று தெரிய ஆரம்பிக்கும்.

மாவீரர் துயிலுமில்லங்கள். சனத்தால் நிறையும், புனரமைப்பு,வேலைகளில் விறுவிப்பு இருக்கும். பாடசாலைப் பிள்ளைகளின் சிரமதானப் பணிகள் சீர்பெறும். புலம் பெயர் உறவுகளின் வருகை பூத்துக் குலுங்கும்.

பாலா அண்ணன், அடேல் அன்ரியின் வருகை பற்றிய கதைக்களம் மழலையின் மகிழ்ச்சி குரல் போன்று காணுமிடமெல்லாம் உலவிக் கொண்டே இருக்கும். எதிரியை அடித்து ஓடவிட்ட, இரத்தம் தோய்ந்த வரலாற்றில் சந்தன வாசம் கலந்திடுமாற் போல அவரது பேச்சும், எழுத்தும் உத்வேகம் ஊட்டும்.



கட்டளைத் தளபதிகள் கூட, தம் சிறகு நீவி எழும் பறவையைப் போல களத்தில் மீண்டும் உன்னி எழுவதற்காக மறுபிறப்பெடுப்பதை உணர்வர். போரிடும்திறனுக்குநிகராக,ஆழமானஅரசியல் பார்வையும், புரிதலும், ஆலோசனைத் தெளிவும் பாலா அண்ணனிடமிருந்து பெற்றுக்கொள்வர், அவர்களிடமிருந்த அரசறிவியல் ஆர்வமானது, பெரும்பாலும் பாலா அண்ணனால் புகட்டப் பெற்றவையாகவே அமைந்திருக்கும்.



எத்தனை ஆண்டுகால இலட்சியத்தால் இணைந்த நட்பின்கட்டு அது. மூத்த போராளிகளின் வானுயர்ந்த மரியாதைக்குரிய பண்பாளராக பாலா அண்ணனும் கூடவே அடேல் அன்ரியும் இருந்தனர் என்பது எத்தனை ஆனந்தமான ஞாபகங்கள்.

நீ, கடுமையான யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் போது.... சமாதானத்தைப் பற்றிய ஆர்வத்தைக் காட்டு. என்கிறார் சீனப் போரியல் வல்லுனர் சன் சூ இங்கு ,இந்தச் சூத்திரம் தேசத்தின் குரல் என்ற ஊக்கியால் நேர்த்தியாக சமப்படுத்தப் பட்டுவிடும்.

எங்கும் நிகழ்ந்திராத பெருங் கண்ணீர், பேரெழுச்சி, மிக அற்புதமான போராட்ட வாழ்க்கை அதனுடே பயணித்த பாலா அண்ணன் நினைவில் இனியவர். நமது தேசியத் தலைவர் அவர்கள் போர்க்கள உலகைச் சுருட்டி எடுத்துப் பாலா அண்ணனின் கையில் கொடுப்பார்.

அது எங்கும் வியாபிக்கும் அமைதியான தேசத்தின் குரல் என அனல் எழுப்பும். அடே அப்பா... இனி.. உங்களுக்கு ஓய்வு. எனக்குத் தாண்டாப்பா வேல.., சும...அந்த இன்பச்சுமை மத்தியிலும்,நாம் கண்ட மெல்லிய சிரிப்பு வேண்டுமே ஐயா.

எமது மக்களை இயல்பாக நடமாட முடியாதபடி முடக்கி வைத்துக் கொண்டும், சாதாரண விலைக்கு வாங்க முடியாதளவிற்கு அத்தியாவசிய பொருட்களுக்கு தடை விதித்துக்கொண்டும்,

தொடர்ச்சி 19 ஆம் பக்கம்



# பூகோளப்போட்டியால் குவியும் நிவாரண உதவிகள்

இலங்கையில் டிற்வா சூறாவளியின் கோர தாண்டவம் தற்போது வரையில் 640 உயிரிழப்புக்களுக்கும் 211 காணாமல்போகும் நிலைமைகளுக்கும் காரணமாகியுள்ளது.

அத்துடன் 473,138 குடும்பங்களைச் சேர்ந்த 1,637,960 பேர் பாதிப்புக்களைச் சந்தித்துள்ளதோடு நாடளாவியரீதியில்847இடைத்தங்கல்முகாம்களில் 82,813 பேர் இன்னமும் தங்கியிருக்கின்றனர்.



டிற்வா சூறாவளியின் தாக்கங்களின் கனதியிலிருந்து மீள்வதற்கு கணிசமான காலமெடுக்கும் என்றநிலை இருக்கின்ற சூழலில் நாட்டில் 15000வரையிலான மண்சரிவு அபாயமுள்ள பகுதிகள் காணப்படுவதாகவும் வடகீழ் பருவப் பெயர்ச்சியால் ஜனவரி முதல்வாரம் வரையில் கனமழைக்குச் சாத்தியப்பாடுகள் உள்ளதாகவும் முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில்பார்க்கின்றபோதுஇயற்கை பேரிடர் தொடர்கதையாகும் துரதிஷ்டவசமான சூழலே காணப்படுகின்றது. தற்போது கூட பதுளை மாவட்டத்தின் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள 14பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான பகுதிகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதனைவிவும் நாடளாவிய ரீதியில் 37 பிரதேச செயலாளர் பிரிவுகள் இரண்டாம் நிலை மண்சரிவு அபாயங்கள் உள்ள பகுதிகளாக அடையாளமிடப்பட்டுள்ளன. வட,கிழக்கு கன மழைக்குள் சிக்கும் நிலைமையும் அதிகமாக காணப்படுகின்றது.

இத்தகையதொரு சூழலில் தான் இலங்கை கடந்த இரண்டு தாசாப்தங்களில் சந்தித்த மிகப்பெரிய பேரழிவாக அனர்த்தத்தை இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ட்ரூ பிரான்சே, 4 மாதகால ‘மனிதாபிமான முன்னுரிமையளிப்புத் திட்டத்தை’ அறிமுகப்படுத்தியிருக்கிறார்.

அத்துடன், 7பிரதான துறைகள் அனர்த்தத்தால் நலிவடைந்துள்ள நிலையில் அவற்றை மீட்டெடுப்பதற்கும் கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகம், மனிதாபிமான முன்னுரிமை யளிப்புத் திட்டத்தினை நடைமுறைப் படுத்துவதற்கு அவசியமான 35.3 மில்லியன் டொலர்கள் நிதியைத் திரட்டுவதற்கு நன்கொடை உதவிகளை வழங்க முன்வருமாறு உலக நாடுகளுக்கும், சர்வதேச அமைப்புகளுக்கும், அபிவிருத்திப் பங்காளிகளுக்கும் பகிரங்க அழைப்பையும் விடுத்துள்ளார்.

தற்போதைய நிலையில், உலகளாவிய ரீதியில் 39இற்கும் மேற்பட்ட நாடுகளும், பல சர்வதேச நிதி நன்கொடையாளர்களும் சுயாதீன அமைப்புக்களும் இலங்கையின் மீள் எழுச்சிக்காக நிதிப்பங்களிப்பைச் செய்திருக்கின்றன.



அந்த வகையில் இலங்கையை மீளக் கட்டியெழுப்பல் நிதியமானது தற்போது வரையில் 1893மில்லியன் ரூபாவை நன்கொடை யாகப் பெற்றுள்ளதாக திறைசேரி யின் செயலாளர் ஹர்சன சூரியப்பெரும உறுதிப் படுத்தியுள்ளார்.

அப்படியிருக்க, அனர்த்தங்கள் ஒரு நாட்டின் மனிதாபிமானப் பொறுப்பை வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்களாக அமைந்தாலும், சமகால உலக மயமாக்கல் சூழலில் அவை புவிசார் அரசியல் போட்டிக்கான களங்களாகவும் உருமாறுகின்றன.

இலங்கையின் அண்மைய டிற்வா சூறாவளிப் பேரழிவு மற்றும் அதற்கு முந்தைய பொருளாதார நெருக்கடி, இத்தீவின் கேந்திர முக்கியத்துவம் காரணமாக உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்ததுடன், உதவிகள் வழங்குவதிலும் குறிப்பிடத்தக்க போட்டியை வெளிப்படுத்தியிருக்கிறது.

குறிப்பாக, இந்தியப் பெருங்கடல் பிராந் தியத்தில் ஆதிக்கம் செலுத்த விளையும் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான பனிப்போர் இந்த உதவிக் களத்திலும் தெளிவாகப் பிரதிபலித்தது.

2004 ஆம் ஆண்டின் சுனாமி அனர்த்தத்தின் போது, அமெரிக்கா தனது போர்க்கப்பல்கள், ஹெலிகொப்டர்கள், மற்றும் 1,500 வரையிலான படையினருடன் பாரியளவிலான மீட்புப் பணிகளில் ஈடுபட்டது.

அப்போது அமெரிக்கா மீள்கட்டுமானப் பணிகளுக்காக கிட்டத்தட்ட 907 மில்லியன்

விதுரன்

டொலர்களை வழங்கியது. இதுவே அந்நாடுகளின் உடனடி மற்றும் நீண்டகால அக்கறையை வெளிப்படுத்தியது.

எனினும், டிற்வா சூறாவளிப் பேரழிவின் போது நாடுகளின் பிரதிபலிப்பில் குறிப்பிடத்தக்க மாற்றம் காணப்படுகிறது. இலங்கையின் கடந்தகால பொருளாதார நெருக்கடியின் போதும் இந்தியா சுமார் 4 பில்லியன் டொலர்களை வழங்கி பட்டினிச்சாவுகள் நிகழ்வதைத் தடுத்தது.

இந்நிலையில் டிற்வா சூறாவளியின் போதும் இந்தியா தனது ‘அயல்நாட்டுக்கு முன்னுரிமை’ என்ற கொள்கையை உறுதிப்படுத்தும் வகையில், ‘சாகர் பந்து’ என்ற பெயரில் பாரியளவிலான உதவி, மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கையை உடனடியாக மேற்கொண்டிருக்கின்றது.

இதற்கு காரணம் தமது தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் முக்கிய தீவு தேசமாகவுள்ள இலங்கை மீதான தங்களின் ‘பிடி’ தளர்ந்து விடக்கூடாது என்பதேயாகும் என்பது வெளிப்படையானது.



இந்தியக் கடற்படையின் ஐ.என்.எஸ். விக்ராந்த், ஐ.என்.எஸ். உதயகிரி, ஐ.என்.எஸ். சுகன்யா போன்ற கப்பல்கள், செடெக் மற்றும் எம்.ஐ-17 ஹெலிகொப்டர்கள், மற்றும் சி-130, சி-17 போன்ற விமானப் படை விமானங்கள் அடுத்தடுத்து கொழும்பு மற்றும் திருகோணமலைத் துறைமுகங்களுக்கு நிவாரணப் பொருட்களையும், தற்காலிக இரும்புப் பாலங்களையும், மருத்துவக் குழுக்களையும் கொண்டு வந்தன.

கூடவே இந்தியப் படைகளும் இலகுவாக இலங்கைக்குள் பிரவேசித்தன. சுமார் 2000 மெற்றிக் தொன் நிவாரணப் பொருட்கள் மற்றும் ஏராளமான ஆளணி, இராணுவ வளங்களின் பிரயோகம் ஆகியவை நெருக்கடியான சூழலில் இந்தியா இலங்கைக்குக் கைகொடுப்பதில் தாம் முன்னணியில் இருப்பதை உறுதிசெய்தது.

இந்தியாவின் இந்த வெளிப்பாடு முழுக்க முழுக்க சீனாவை விடவும் தாங்களே இலங்கையில்

தொடர்ச்சி 06ஆம் பக்கம்

**பூகோளப் ... தொடர்ச்சி ...**

மேலாதிக்க நிலையை அடைந்திருப்பதை காண்பிப்பதே பிரதான நோக்கம் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. இது பூகோளப் போட்டியின் களத்தில் இந்தியாவுக்கு ஆறுதலான வொரு சூழலை தற்போதைக்கு உருவாக்கியுள்ளது.

இலங்கையில் அம்பாந்தோட்டைத் துறை முகம், கொழும்புத் துறைமுக நகரம் போன்ற பாரிய கேந்திர பொருளாதார நலன் களைக் கொண்டிருக்கும் சீனா, டிற்வா சூறா வளிப் பேரழிவின் போது தனது படைபலத்தையோ, விமானப்படையையோ மீட்பு நடவடிக்கைகளுக் காக உடனடியாக அனுப்ப வில்லை. அதன் உதவிப் பொருட்கள் கிட்டத்தட்ட 10 நாட்களுக்குப் பின்னரே விமானம் மூலம் வந்து சேர்ந்தன.

அப்படிப்பார்க்கின்றபோது சீனாவின் செயற்பாடுகள்இந்தியாவுக்கும்அமெரிக்காவுக்கும் ஒருவித ஆறுதலை உடனடியாக அளிப்பது போன்றிருக்கின்றது. ஏனெனில், இலங்கையில் கால்பதிப்பதற்கு சீனா சந்தர்ப்பம் பார்த்திருப்பதாக இந்தியா, அமெரிக்கா மத்தியில் அனுமானம் நீண்டகாலமாகவே உள்ளது.

அனர்த்த சூழலில் அவ்விதமான நிலைமை யொன்று தோற்றம்பெற்றிருக்கவில்லை. அதற் காக சீனா தனது பூகோள அரசியல் நலன்க ளில் இருந்து பின்வாங்கவில்லை. உடனடிப் பேரழிவுக்கான உதவிக் களத்தில் அது பதுங்கு வதைப் போன்றதொரு தோற்றம் தான் வெளிப் பட்டிருக்கிறது.

ஆனால் சீனா இம்முறை வித்தியாசமாக நிலைமைகளை கையாள்கிறது. குறிப்பாக அரசுக்கும், அரசுக்கும் இடையிலான இருதரப்பு உறவு என்ற அடிப்படையில் தான் செயற்படுகின் றது.

அந்த வகையில் தான் சீனா, இலங்கை மக்களுக்கான நிவாரண உதவி முயற்சிகளுக்குப் பங்களிப்புச் செய்யும் வகையில் சீன அரசாங்கத் தினால் ஒரு மில்லியன் டொலர்கள் நிதியுதவியும், 10 மில்லியன் ஆர்.எம்.பி பெறுமதியான நிவாரணப்பொருட்களையும் வழங்கியது.

இலங்கையிலுள்ள வெளிநாட்டு சீன சங்கத்துடன் இணைந்து சீன வர்த்தக சம்மேளனத்தினால் முன்னெடுக்கப்பட்ட நன்கொடை சேகரிப்பு முயற்சியால் 10 மில்லியன் ரூபா நிதியும் வழங்கப் பட்டுள்ளது.

அதேவேளை சீன செஞ்சிலுவை சங்கத்தி னால் இலங்கை செஞ்சிலுவை சங்கத்துக்கு 100,000 டொலர்கள் உடனடி நிதியுதவியை வழங்கியது. இந்தச் செயற்பாடுகள், இருதரப்பு உறவு, சர்வதேச பங்காளர் ஆகிய இரு பாத்திரங்களை வெளிப் படுத்துவதாக உள்ளது.

இதன்மூலம், இலங்கையின் இறைமைக் குள் தாங்கள் தலையிடவில்லை என்ற தோற்றப் பாட்டை வெளிப்படுத்தி அமெரிக்கா, இந்தியா, உள்ளிட்ட ஏனைய மேற்குல நாடுகளை நோக்கி ஒட்டுமொத்தமாக சுட்டுவிரலை நீட்டுவது தான் சீனாவின் திட்டமாக உள்ளது.

குறித்த மூலோபாயத்தின் ஊடாக மேற்கு லக மற்றும் பிரந்திய ஏகாதிபத்தியத்துக்கு எதிரான கொள்கைகளையும், சிந்தனைகளையும் கொண்டிருக்கும் ஜே.வி.பியின் அடிப்படை வாதிகளை அணுகுவதன் ஊடாக அநுரவுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தலாம் என்று சீனா கருதுகிறது.

அதேநேரம், அனர்த்தத்தின் போதான அமெரிக்காவின் பிரதிபலிப்பும் கவனிக்கத்தக்கது. பேரழிவுக்குப் பிறகு அமெரிக்கா அறிவித்த அவசர உதவி வெறும் 2 மில்லியன் டொலர்களாக இருந்தது. அத்துடன், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் 2.1 மில்லியன் டொலர்கள் உதவித் திட்டம் கூட நிவாரணப் பொருட்களை விநியோகிப்பதற்காக உதவும் திட்டம் மட்டுமே.

மொத்தத்தில், அமெரிக்காவின் மொத்த நிதியுதவி 4.1 மில்லியன் டொலர்களே. இது ஐக்கிய அரபு எமிரேட்ஸ், இந்தியா போன்ற நாடுகள் வழங்கிய உதவிகளுடன் ஒப்பிடும் போது மிகக் குறை வாகவே உள்ளது.

சுனாமிக்குப் பிந்தைய உதவிகளுடன் ஒப்பிடுகையிலும் இது மிக மிகச் சொற்பமான வையாகவே உள்ளன. டொனால்ட் ட்ரம்ப் அரசாங்கத்தின் 'அமெரிக்காவின் வளங்கள் அமெரிக்கர்களுக்கே' என்ற கொள்கை யால் வெளிநாட்டு உதவித் திட்டங்கள் குறைக்கப் பட்டமையே இதற்கு அடிப்படையில் காரண மாகின்றது.

அனர்த்தங்கள் நிகழ்ந்து ஒருவாரத்தின் பின்னர் அமெரிக்க விமானப்படையின் சி-130 ஜே விமானம் கடந்த 8ஆம் திகதி பலாலி விமான நிலையத்தில் தரையிறங்கியது. அதற்கு முதல் நாள், அமெரிக்க விமானப்படையின் இரண்டு சி- 130 ஜே விமானங்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்திருந்தன.

சமீபத்தில் இலங்கைக் கடற்படைக்கு நான்காவது ரோந்துக் கப்பலை வழங்கியதன் மூலம் தனது ஆழமான பாதுகாப்பு உறவுகளை அது வெளிப்படுத்தியிருக்கிறது.

அத்துடன், அனர்த்த நிலைமைகளுக்கு மத்தியில் இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அந்நாட்டின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் அலிசன் ஹூக்கர் போன்ற உயர் அதிகாரிகள் கூட பாதுகாப்பு மற்றும் வர்த்தக உறவுகளுக்கே முக்கியத்துவம் அளிப்பதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

தற்போதைய அமெரிக்காவின் கவனம் பேரழிவு நிவாரணத்தில் இருந்து பாதுகாப்பு உறவுகளை நோக்கி நகர்ந்துள்ளது. அதற்கு காரணம் இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் தன்னுடைய ஆதிக்கத்தை தக்கவைப்பதேயாகும்.

இவ்வாறானநிலையில் மற்றொரு வல்லாதி க்க நாடான ரஷ்யா அனர்த்த காலம் முழுவதும் அடக்கியே வாசித்தது. குறிப்பான அணுமின் ஆலை களை நிறுவுவதற்கு தொடர்ச்சியாக முட்டுக்கட்டைகள் இடப்படுகின்றமை அதற்கான மூலகாரணமாக இருக்கிறது.

எனினும், ரஷ்யாவும் ஜெனரேட்டர்கள், நீர் பாய்ச்சுவதற்கான மோட்டர்கள், கூடாரங்கள், அரிசி, சீனி, எண்ணெய் என்பன உள்ளடங்கலாக சுமார் 35 தொன் பெறுமதியான அத்தியாவசியப்பொருட்கள் வழங்கி அனர்த்தப் பங்களிப்பு நாடுகளின் பட்டியலில் இணைந்துள்ளது.

எவ்வாறாயினும் இலங்கையில் நிகழந் திருக்கின்ற அனர்த்தம் இந்தியா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளின் போட்டித் தன்மையான நகர்வுகள் இலங்கையின் மீள் எழுச்சிப் பாதையில் கணிசமான செல்வாக்கைச் செலுத்துகின்றன என்பது வெளிப்படையானது. ஆனால் இந்த உதவிகள் அனர்த்தங்களில் இருந்து மீள் எழுச்சி பெற்ற இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கைத் தெரிவுகளில் தொடர்ந்து செல்வாக்குச் செலுத் தாமல் இருக்கப்போவதில்லை.

• • •

# தேசத்தின் குரல்!



**அ. சுரேஷ் ( மன்னார்)**

ஈழத்தமிழினம், தலைமுறை தலைமுறை யாக, பூமி வியர்க்கும் வகையில் வாழ்ந்து காட்டக்கூடியதும், நவீன மானுட சமூகத்திற்கு முதற்தர முன்னுதாரணத்தை கையளிக்கும், தகுதியும் வாய்க்கப் பெற்றிருந்தது.

தமிழீழ தேசம் அதி உன்னதம் பெற் றிருந்தது. அது, முப்பது வருடத்திற்கும் மேலான இரத்தமும், வியர்வையும்,கண்ணீரும் கலந்த வரலாற்று அனுபவ சேமிப்பாக பரிணமித்து மிளிர்ந்தது.

ஏன் அநியாயமாக வலிந்து சிதைக்கப்பட் டது. தேசியத் தலைவர், தளபதிகள்,போராளிகள் துறைசார் பொறுப்பாளர்கள், தாங்கிநின்ற மக்கள் இவர்களின் போராட்டக் கள உழைப்புத்தான் அத்தகைய விலை மதிப்பிடமுடியாத உயி ரோட்டமிக்க வரலாற்று அனுபவமாக திரட்சி கண்டிருந்தது. இத்தகைய ஒரு பிரபஞ்ச அதி சயத்தை சர்வதேசம் கண்டுணரவில்லை.

பூமிப்பந்தின் இன்னுமொரு ஆச்சரியத்தை புரிந்துகொள்ளும் எவரும் புதிதாய் பிறப் பெடுத்த மெய்சிலிர்ப்பை உணர்வர். இடையூறு அளித்து, உன்னி எழும் குதிகாலைத் தறித்து, விரித்துப் பறக்கும் சிறகினை உடைத்து,' ஆற அமர தரித்து உயரும் வெளிப்படு தளத்தை சிதைத்து அழித்ததன் ஊடாக , சிறிலங்கா இன்று தெருச்சண்டியர் புகுந்த கூடாரமாக,மோது கள மாக மாற்றப்பட்டுவிட்டது.

போரின் இடையே....அமைதிவழியில் தேசத்தின் குரல் பாலா அண்ணன். அதனைத் தடுத்து மீட்கவும், பாதுகாக்கவும் தனது இருதயத்தை உருக்கி ஊற்றினார். மூளையைப் பிழிந்து தந்தார், இறுதி மூச்சின் காற்றில் பரிவன் பின் ஈரலிப்பு இருந்தது, ஆன்ம நடுக்கத்தைப் போக்கும் இளஞ்சூடு அதில் கலந்திருந்தது.

தனது கடினமான சத்தியப் போராட்டப் பயணத்தின் நடுவில், நோயினால் ஆட்கொள்ளப் பட்டார். சாவினைத் தழுவினார் எங்கள் பாலா அண்ணன். தேசத்தின் குரல் ஒலித்துக் கொண்டே இருக்க வேண்டும். புத்தம்புது தேசம் உருவாகும் அதுவே அவர் தந்த நம்பிக்கை.

• • •



# டிற்வா புயலின் தாக்கத்தை நிவாரண அரசியலாக்கும் அரசியல்வாதிகள்



**உயிரோடைத் தமிழ் வானொலிக்கு தாமோதரம்பிள்ளை பிரதீவன் அவர்கள் அளித்த செவ்வியின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**

**அம்பாறை மாவட்டத்தில் டிற்வா புயல் ஏற்படுத்திய பாதிப்புகள் மற்றும் நிவாரண நிலைமை என்ன?**

டிற்வா புயல் நாடு முழுவதும் மிகப் பெரும் அழிவை ஏற்படுத்தி 639 பேர் உயிரிழந்தனர். 300க்கும் மேற்பட்டோர் காணாமல் உள்ளனர். கண்டி, கேகாலை, கொரோணாகல, பதுளை ஆகிய பல மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அம்பாறையில் பெரிய அளவிலான அழிவு இல்லாவிட்டாலும் எட்டு உயிரிழப்புகள் பதிவாகின. தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின, மக்கள் இடம்பெயர்ந்தனர், மின்சாரம்–குடிநீர்–போக்குவரத்து தடைகள் காரணமாக தொழில் இழப்பு ஏற்பட்டது. அம்பாறை மற்றும் வடகிழக்கு பகுதிகளுக்கு நிவாரண உதவிகள் குறைவாகவே சென்றதாக மக்களிடையே கருத்து உள்ளது. இந்தியா 50 மில்லியன் ரூபாய் உதவி அறிவித்திருந்தாலும் அது எந்த அளவுக்கு நேராக வழங்கப்படும் என்பது தெளிவாகவில்லை. அதே சமயம் அம்பாறை மக்கள் தாங்களே ஒரு கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட பொருட்களை சேகரித்து மலையகத்திற்கு அனுப்பியுள்ளனர்.

**புலம்பெயர் தமிழர்கள் அனுப்பும் நிவாரண உதவிகளை அரசிடம் ஒப்படைப்பது சரியா?**

மனிதாபிமான ரீதியில் உதவி அனுப்புவது அவசியம். ஆனால் தமிழர்கள் சேகரிக்கும் நிவாரணங்களை அரசிடம் கொடுக்கும்போது அரசியலாக்கப்படும் அபாயம், திசைதிருப்பப்படும் அபாயம், இனவாத அடிப்படையில் பகிரப்படும் அபாயம் இருக்கிறது. சிங்கள மக்களிடம் நல்லெண்ணம் உருவாக வேண்டுமெனில் நிவாரணத்தை தமிழர்களே நேரடியாக வழங்குதல் மிகவும் பயனுள்ளதாகும். முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் வெள்ள அனர்த்தத்தில் சிங்கள மக்களுக்கு உதவி அளித்தபோது அவர்களின் மனப்பான்மை மாறியது போல, இன்றும் நேரடி வழங்குதல் இனப்பிரிவை உடைக்கும் வழி. அதேபோல் இன்று சில இடங்களில் பௌத்த மத குரு போன்றவர்கள் “இது சிங்கள மக்களுக்கு மட்டும்” என கூறி பொருட்களை வழங்கிய சம்பவங்களும் உள்ளன. எனவே புலம்பெயர் மக்களின் உதவி நம்பகமான தமிழ் அமைப்புகள் அல்லது செயற்பாட்டாளர்களின் வழியாக நேரடியாக மக்களிடம் சென்றடைய வேண்டும்.

**தமிழ் அரசியல்வாதிகள் மீது மக்கள் நம்பிக்கை இழந்ததற்கான காரணம் என்ன?**

2009க்குப் பிறகு தமிழ் அரசியல்வாதிகள் மக்களின் வாழ்வாதாரம், பாதுகாப்பு, உரிமைகள் ஆகியவற்றை முன்னிறுத்தாததால், மக்கள் அவர்களை நம்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நிவாரண காலங்களிலும் கூட அரசியல் இலாபத்திற்காக செயல்படுவது மக்களின் வெறுப்பை அதிகரிக்கிறது. ஆனால் பொதுமக்கள் நேரடியாக தமிழர்களிடமிருந்து நிவாரணம் பெறும் போது அவர்களிடம் இருந்த தவறான புரிதல்கள் உடைந்து, நல்ல மனப்பான்மை உருவாகிறது. தமிழ் அரசியல்வாதிகள் இந்த மனிதநேய வாய்ப்பை



மக்கள் ஒருமைப்பாட்டிற்கு பயன்படுத்தாமல், சொந்த அரசியல் லாபத்துக்காக திசைதிருப்புவது முக்கிய காரணமாகும்.

**மனோ கணேசன் கூறியுள்ள "மலையக மக்களை புலம்பெயர் தமிழர்களின் காணிகளில் குடியேற்றலாம்" என்ற கருத்து எவ்வளவு பொருத்தம்?**

இது ஒரு முழுமையான அரசியல் நாடகம். மலையக மக்களுக்கு அவர் இதுவரை என்ன செய்தார் என்பதிலேயே மிகப் பெரிய சந்தேகம் உள்ளது. வடக்கு–கிழக்கில் இராணுவம் பிடித்திருக்கும் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் உள்ளன; அவற்றை விடுவித்து மக்களை குடியேற்றுவது முதன்மையான தீர்வாக இருக்க வேண்டும். அரசுக்குச் சொந்தமான காணிகளும் பல உள்ளன. இவற்றை பேசியே தீர்வு காணாமல், புலம்பெயர் தமிழர்களின் தனிப்பட்ட காணிகளை மட்டும் குறிவைப்பது அவரது அரசியல் நோக்கத்தை வெளிக்காட்டுகிறது.

**ரணில், மைத்திரி, நாமல் போன்ற ஊழல்வாதிகள் நிவாரண தவறுகள் குறித்து அரசுக்கு எதிராக வழக்கு தொடரப்போவதாக கூறுவது பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

இது மிகப் பெரிய நகைச்சுவை. நாட்டை பல தசாப்தங்களாக சுரண்டி ஊழல் செய்தவர்கள் இன்று நிவாரண அரசியலை முன்னிலைப்படுத்தி “நாம் நீதி கேட்கிறோம்” என்று பேசுவது அவர்களின் இரட்டைப்பாங்கையும் பொய்மையும் வெளிப்படுத்துகிறது. சுனாமி அனர்த்தத்திலும், மனித புதைகுழிகள் வெளிப்பட்ட போதும் இவர்கள் நீதியை நாடவில்லை. இன்று இயற்கை அனர்த்தத்தை அரசியல் விளையாட்டுக்குப் பயன்படுத்துகின்றனர்.

**தேசியத் தலைவர் உருவாக்கிய கால நிலை அவதானிப்பு மையத்தின் முக்கியத்துவம் என்ன?**

போரின் நடுவிலும் மக்களின் பாதுகாப்பை முன்னிறுத்தி, இயற்கை அனர்த்தங்களை முன்கூட்டியே கணித்து எச்சரிக்கை காலநிலை அவதானிப்பு மையத்தை தேசியத் தலைவர் நிறுவினார். இன்று அரசியல் தலைவர்கள் நிவாரண அரசியலை மட்டுமே செய்கிறார்கள்; மக்களின் பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை குறித்து கவனம் குறைந்துள்ளது. மக்கள் தங்களைத் தாங்களே காப்பாற்ற வேண்டிய கட்டாய நிலை உருவாகியுள்ளது.

• • •



# செய்தியில் மீள்கட்டுமானம் வேண்டாம், செய்கையில் மீள்கட்டுமானம் தேவை!

பா. அரியநேத்திரன்

இலங்கையில் 2004 டிசம்பர் 26 ல் வடகிழக்கு கரையோரப்பகுதிகளை தாக்கிய ஆழிப் பேரலை அனர்த்தத்துக்குப் பின்னர் கடந்த 2025 நவம்பர் 27 தொடக்கம் 30 வரை இலங்கையில் ஏற்பட்ட டிற்வா சூறாவளியாலும், மழை வெள்ளத்தாலும், மண்சரிவுகளாலும் கடுமையாக மிகப்பாரிய பாதிக்கப்பட்ட 22 மாவட்டங்களை தேசிய அனர்த்த பகுதிகளாக அறிவித்து சிறப்பு வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.



2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இறப்புப் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் பகுதி II இன் பிரிவு 9 இன் கீழ் செய்யப்பட்ட பிரகடனத்தின்படி நாடு முழுவதும் பல நாட்களாக பெய்த கனமழை, வெள்ளம் மற்றும் பாதகமான வானிலையால் ஏற்பட்ட விரிவான சேதத்தைத் தொடர்ந்து இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய அனர்த்த வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ள மாவட்டங்களாக கண்டி நுவரெலியா பதுளை குருநாகல் மாத்தளை கேகாலை கம்பகா முல்லைத்தீவு அனுராதபுரம் கொழும்பு யாழ்ப்பாணம் பொலனறுவை மன்னார் புத்தளம் இரத்தினபுரி மொனராகலை மட்டக்களப்பு அம்பாறை திருகோணமலை கிளிநொச்சி வவுனியா களுத்துறை என்பன பட்டியல் இடப்பட்டன.



இந்த அனர்த்தங்கள் நடந்து தற்போது இரண்டு வாரங்கள் கடந்த நிலையில் மீள் கட்டுமானங்களை பொறுத்தவரை பலவகையான சுற்றுநிருபங்களும், நிவாரணங்களைக்கான விண்ணப்ப படிவங்களும், வெளிநாடுகளின் மனிதாபிமான உதவிகளும், உள்ளூரில் உள்ள பவகையான அமைப்புகள் பொருட்களை சேகரித்து பாதிக்கப்பட்ட இடங்களுக்கு கொண்டு செல்லும் காட்சிகளும், ஜனாதிபதி அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் என மற்றும் எதிர்கட்சிகள் என பலர் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு செல்லும் காட்சிகளும் சமூக ஊடகங்களில் தினமும் காட்சிகளாக வெளிவந்துகொண்டே உள்ளன.



ஆனால் மீள் கட்டுமானங்கள் என்பது உடனே முழுமையாக சாத்தியப்படக்கூடிய ஒன்றல்ல இன்னும் பல காலங்கள் செல்லும் என்பது உண்மை. பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவித்தொகைகள் பற்றி ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட கொடுப்பனவு விபரங்களை பார்க்கும்போது ஆச்சரியமாகவும், அவ்வாறான தொகைகளை அனைவருக்கும் சென்றடையக் கூடியவகையில் ஏற்கனவே ஜனாதிபதி நிதியத்தில் உள்ள பணமும், அமைச்சுக்களில் ஒதுக்கிய பணமும் ஈடுசெய்யமுடியுமா என்ற வினா உள்ளது.

வெளிநாடுகள் பலவகையான நிதி உதவிகள் வழங்குவதாக கூறினாலும் எதிர்பார்த்த தொகைகள் இல்லை மட்டுப்படுத்தப்பட்ட நிதிகளையே இதுவரை வழங்கப்பட்டதை அறிய முடிகிறது.

உடைந்த சில பாலங்களை தற்காலிகமாக திருத்துவதற்காக இந்தியா நேரடியாக தளபாடங்களுடன் வருகை தந்து திருத்துவதை காணலாம் இதுபோல் வேறு நாடுகளும் சில இடங்களை பாரம் எடுத்து முக்கியமாக போக்குவரத்து வீதிகளை திருத்தும் சேவைகளில் முயற்சிப்பதை அவதானிக்க முடிகிறது.

இலங்கைக்கு இதுவரை பல நாடுகள் மற்றும் சர்வதேச நிறுவனங்களிடமிருந்து பல்வேறு உதவிகள் கிடைத்துள்ளன குறிப்பாக, பொருளாதாரநெருக்கடி மற்றும்சமீபத்திய 'டிற்வா' புயல் போன்ற இயற்கை அனர்த்தங்களின் போது இந்தியா, சீனா, ஜப்பான், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் (IMF) மற்றும் பல ஐரோப்பிய, ஆசிய நாடுகள் மனிதாபிமான உதவிகள், நிதி உதவிகள், கடன்கள் மற்றும் அபிவிருத்தி திட்டங்களுக்கான உதவிகளை வழங்கியுள்ளன, இதில் வெளிநாட்டு வாழ் இலங்கையர்களின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது.

**முக்கிய உதவிகள்:**

**1. இந்தியா: இலங்கைக்கு மிகப்பெரிய நிதி உதவியாளராக உள்ளது, குறிப்பாக பொருளாதார நெருக்கடி காலத்தில் கடன்கள், நாணய பரிமாற்றங்கள் மற்றும் மனிதாபிமான உதவிகளை வழங்கியுள்ளது.**

**2. சர்வதேச நாணய நிதியம் (IMF): பொருளாதார ஸ்திரத்தன்மைக்கான நிதி உதவிகளை வழங்குகிறது, இது கடன் மறுசீரமைப்பு மற்றும் நிதி உதவிக்கு வழி வகுக்கிறது.**

**3. உலக வங்கி (World Bank): அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களுக்கான உதவிகளை வழங்குகிறது, ஆனால் சில சமயங்களில் கொள்கை மாற்றங்களை எதிர்பார்க்கிறது.**

**4. சீனா: உள்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு கடன்களை வழங்கியுள்ளது.**

**5. ஜப்பான்: அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் மனிதாபிமான உதவிகளில் பங்களிக்கிறது.**

**6. மனிதாபிமான உதவிகள்: சமீபத்திய டிற்வா புயல் போன்ற பேரிடர்களுக்குப் பிறகு, சுமார் 70 நாடுகள் மனிதாபிமான உதவிகளை வழங்க உறுதியளித்துள்ளன. இதில் தமிழ்நாடு அரசின் உதவிகளும் அடங்கும்.**



பிற முக்கிய பங்களிப்புகளாக வெளிநாட்டு வாழ் இலங்கையர்கள் "இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புதல்" போன்ற நிதிகளுக்கு 19,000 க்கும் மேற்பட்ட வெளிநாட்டு வாழ் இலங்கையர்கள் பங்களித்துள்ளனர் என கூறப்படுகிறது.

நேரடி முதலீடுகள்பல வெளிநாட்டு முதலீடுகள் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு

தொடர்ச்சி 20ஆம் பக்கம்

# மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்

டிசம்பர் 10ம் திகதி சர்வதேச மனித உரிமைகள் நாள். இன்று உலகம் முழுவதும் மனித உரிமைகள் மதிக்கப்படுகின்றனவா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. அதே நேரம் இலங்கையை பொறுத்தமட்டில் மனித உரிமைகள் சில வரையறைகளை கொண்டிருக்கின்றன. சிவில் உரிமைகள்,அரசியல் உரிமைகள்,பொருளாதார உரிமைகள் என அவை விரிகின்றன.

1978ம் ஆண்டின் இரண்டாம் குடியரசு யாப்பில் மனித உரிமைகள் தொடர்பில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதனோடு இணைந்த 1948 டிசம்பர் 10ல் மனித உரிமைகள் பிரகடனத்தை ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டது.

மனித உரிமைகள் பிரகடனத்தில் 30 உறுப்புரைகள் காணப்படுகின்றன. இருந்தாலும் பல்லின சமூகம் வாழும் இலங்கையில் தற்காலத்தில் மாறுபட்ட நிலை காணப்படுவதனை அவதானிக்க முடிகிறது.

எடுத்துக்காட்டாக குறித்த உறுப்புரைகளில் உறுப்புரை 05ல் சித்திரவதைகளில் இருந்து விடுபடுவதற்கான உரிமை, உறுப்புரை 07ல் அனைவரும் சட்டத்தின் முன் சமம், உறுப்புரை 19ல் பேச்சு சுதந்திரம் போன்றன காணப்படுகின்றன. ஆனால் இவை எதையும் இலங்கை அரசு தமிழ் மக்கள் விடயத்தில் கடைப்பிடிப்பதாக இல்லை. இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டம் பயன் படுத்தப் படுகின்றது. இந்த நிலை மனித உரிமைகள் இலங்கையில் இருக்கின்றதா என்பது குறித்து கேள்வி எழுகின்றன.

பயங்கரவாத தடைச் சட்டம்,அவசரகால சட்டம் போன்றன பொது மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கு தடையாக உள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் இலங்கை பற்றிய உரைகள் இடம் பெற்றாலும் தமிழ் பேசும் மக்களுக்கான தீர்வுகள் இது வரைக்கும் கிடைக்கவில்லை. வடகிழக்கில் சர்வதேச மனித உரிமைகள் தினமான டிசம்பர்10ம் திகதி அன்றும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளால் நீதி கோரிய போராட்டங்கள் இடம் பெற்றன.

வவுனியா, அம்பாறை போன்ற மாவட்டங்களை சேர்ந்தவர்கள் இந்த நாளில் சர்வதேச நீதி விசாரனையை வலியுறுத்தி போராடினார்கள்.

தற்போதைய அரசாங்கம் முந்திய அரசாங்கம் என்றும் ஒட்டு மொத்த இலங்கையை வைத்து பார்க்கின்ற போது 2009க்கு பின்னர் முன்னேற்ற கரமான விடயமாக இருந்தாலும் வடக்கு கிழக்கில் குறிப்பாக தமிழ் பேசும் மக்களுடைய பிரச்சினைகளை அதாவது தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக அரச கட்டமைப்புக்களால் இழைக்கப்படுகின்ற பிரச்சினைகளை அறிக்கையிடுகின்ற ஊடகவியலாளர்கள் தொடர்ச்சியாக அழுத்தங்களுக்கு முகங்கொடுத்து வருவதனை நாங்கள் பார்க்கின்றோம்.

**கிண்ணியான்**

என்ற அசமந்த போக்கு காணப்படுகிறது.

தகவல் அறியும் உரிமை சட்டத்தின் பிரகாரம் தகவல்களை போட்டு தான் பெறலாம் என்பது இல்லை.இதன் உண்மையை பார்த்தால் அரச நிறுவனங்கள் தாமாகவே முன்வந்து வெளிப்படுத்த வேண்டும் என்பதுதான் அடிப்படை கோட்பாடு அதை செய்யாமல் பொறுப்புக்கூறல், வெளிப்படைத் தன்மை என்று மிகவும் அதிகளவில் கதைக்கும் அரசாங்கம் சில முக்கிய விடயங்களை



தொடர்ச்சியாக பயங்கரவாத தடுப்பு பிரிவினாலும் குற்றவியல் திணைக்களத்தினாலும் தொடர்ச்சியாக விசாரனை என்ற பெயரில் அழைப்பதையும் பார்க்கிறோம். இவர்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யும் சந்தர்ப்பங்கள் குறைந்து இருந்தாலும் அவர்களுக்கு சிக்கல் கொடுத்து அச்சுறுத்தும் விதமாக வாழ்க்கையினை கஷ்டத்துக்குள்ளாக்கி விசாரணை என்ற பேரில் நடந்தேருவதை காண்கிறோம்.

அதே நேரம் மிக சமீபத்தில் பத்திரிகை ஆசிரியர் ஒருவரை பயங்கரவாத பிரிவால் அழைக்கப்பட்டிருப்பதென்பது மிகப் பாரதூரமான விடயமாக பார்க்கப்படுகின்றது .இது தொடர்பில் பல ஊடக நிறுவனங்களும் அறிக்கைகளை வெளியிட்டிருந்ததை காணக்கூடியதாக இருந்தது.

இது போன்ற விடயம் ஊடகத் துறையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் சுருக்கமாக கூறுவதானால் பாரியளவில் ஊடகத் துறையில் முன்னேற்றகரமான விடயங்கள் ஏற்படுத்தப் படவில்லை.

கேட்கின்ற போது தகவல் அறியும் உரிமை சட்டத்தின் பின் ஒழிப்பதும் அதிலும் ஊடகங்கள் கேட்கின்ற கேள்விகளை ஒழிப்பது ஊடகத் துறையில் பாரியளவு தாக்கத்தினை ஏற்படுத்தும்.

பயங்கரவாத தடைச் சட்டம் ஒழிக்கப்பட வேண்டும் என இலங்கை முழுவதும் கையெழுத்து போராட்டம் செய்த ,ஊர்வலங்கள் நடைபெற்றது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தன்னுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் பயங்கரவாத தடைச் சட்டம் அது தொடர்பான சட்டங்கள் நீக்கப்படும் என கூறியும் ஒரு வருடம் கடந்தும் எதுவும் நடைபெறவில்லை.

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவது பற்றிய குழு ஒன்றை அமைத்தும் புதிய சட்ட மூல வரைபினை ஏற்படுத்துவது பற்றியும் சொல்கிறார்கள். பின் இச்சட்டம் ஆகஸ்ட் மாதத்தில் இடம் பெற்ற மனித உரிமை கலந்துரையாடல் தொடர்பில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு நீக்கப்படும் என்று சொல்லப்பட்டது.

இன்று வரை அது நீக்கப்படவில்லை புதிய சட்ட வரைவு சமர்ப்பணங்களை நீதியமைச்சுக்கு மேற்கொண்டு பெரும் அளவான சமர்ப்பணங்கள் சமர்ப்பிக்கப்பட்டும் கூட இந்த நீதியமைச்சின் தலைமையில் நியமிக்கப்பட்ட குழு அதாவது இரண்டாவது வரைவு தயார் நிலையில் இருக்கின்றது என்றும் இது வரைக்கும் பொது மக்களின் பார்வைக்கு குறித்த வரைவு சமர்ப்பிக்கப்படவில்லை.




இவ்வாறான நிலையில் இது குறித்து மூத்த சட்டத்தரணி ஐங்கரன் குகதாதன் தெரிவிக்கையில் “மனித உரிமைகள் கட்டமைப்பில் மாற்றங்கள் ஏற்பட்டதாக நான் உணரவில்லை.யுத்தத்திற்கு பின்னர் அரச இயந்திரங்களால் ஏற்படுத்தப்படும் தாக்குதல்களால் ஊடக சுதந்திரம் குறைவடைந்துள்ளது.

இந்த அரசாங்கம் ஊடக துறையில் வெளிப்படைத் தன்மை, பொறுப்புக்கூறல் போன்றவற்றை வைத்து தேர்தல் பிரச்சாரங்களை முன்னெடுத்திருந்தாலும் சில ஊடக நேர்காணல்களில் அல்லது கலந்துரையாடல்களில் சில விபரங்களை கேட்ட போது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெற்றுக் கொள்ள முடியும்

ஆகவே பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பிலும் எவ்விதமான முன்னேற்றங்களும் இடம் பெறவில்லை.தடுப்பு காவல் உயிரிழப்பு என்பது இலங்கையில் சாதாரணமாக மாறிவிட்டது என்ற நிலைதான் காணப்படுகிறது.

இது எதிலும் முந்தைய தற்போதை அரசாங்கங்களுக்கிடையில் எவ்வித வேறுபாடுக ளும் இல்லை. அது சம்மந்தமான புதிய அணுகு முறைகளையும் தற்போதைய அரசாங்கம் கூட முன்னெடுப்பதாக தெரியவில்லை. அதே

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# அமரர் செல்லையா இராசதுரை பற்றி சொல்ல மறந்த உண்மைகள்..!



பா. அரியநேத்திரன்

மட்டக்களப்பு தொகுதியின் இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினராகவும், இந்துசமயகலாசார அமைச்சராகவும் செயற்பட்டு இயற்கை எய்திய அமரர் செல்லையா இராசதுரை மட்டக்களப்பு சத்துருக்கொண்டானில் *1927* ஜூலை,*27* ல் பிறந்து புளியந்தீவில் திருமணம் முடித்து வாழ்ந்தவர் *2025* டிசம்பர், *07* ல் *98* அகவையில் சென்னையில் இயற்கை எய்தினார்.



தந்தை செல்வா இலங்கைத்தமிழ் அரசுக் கட்சியில் *1952* ல் உள்வாங்கி *1956* தொடக்கம்,*1977* வரை இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினராக மட்டக்களப்பு தொகுதி மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர். இவர் ஒரு இலக்கியவாதிகாவும், பேச்சு ஆற்றல் மிக்கவராகவும், தமிழ்தேசிய அரசியலை மட்டக்களப்பில் அத்திவாரம் இட்ட ஒருவராகவும் இவருடைய செயல்பாடுகளை அவதானிக்க முடிகிறது. தமிழரசு கட்சி ஆயுள்கால உறுப்பினராக மட்டக்களப்பு மாவட்டத்தில் *25* வருடங்களாக செயல்பட்டவர் இருந்தும் எந்த கட்சிப்பொறுப்பு பதவிகளும் இவருக்கு வழங்கப்படவில்லை.

*1967* ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மாநகர சபையின் முதலாவது முதல்வராக ஓராண்டு காலத்திற்குப் பதவியில் இருந்தார்.

*1972* மே *04* ல் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத் தமிழரசுக் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய மூன்று கட்சி தலைவர்களான சா. ஜே. வே. செல்வநாயகம், கணபதி காங்கேசர் பொன்னம்பலம், சௌமிய மூர்த்தி தொண்டமான் ஆகியோர் இணைந்து தமிழர் கூட்டணியை ஆரம்பித்து அதன் தலைவராக வீரசிங்கம் ஆனந்த சங்கரியும் செயலாளராக கே. கே. கனகராஜாவும் தெரிவு செய்தனர். அதிலும் செல்லையா இராசதுரைக்கு முக்கிய இடம் வழங்கவில்லை.




*1973* செப்டம்பர் *07*ல் யாழ்ப்பாணம் மல்லாகத்தில் இடம்பெற்ற இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி மகாநாட்டில் தாம் எப்படியும் தலைவராக தெரிவு செய்யப்படுவேன் என்ற நம்பிக்கையில் இருந்த செல்லையா இராசதுரைக்கு அப்பாப்பிள்ளைஅமிர்தலிங்கம் வேட்டு வைத்தார். இராசதுரையும், அமிர்தலிங்கமும் தலைவர் பதவிப்போட்டியில் முரண்பாடுகள் எழுந்தபோது தந்தை செல்வா தலையிட்டு அமிர்தலிங்கத்தையே தலைவராக நியமித்தனர் அதிலும் இராசதுரை மனச்சோர்வுடன் இருந்தார்.

தந்தை செல்வாவை மிகவும் மதிக்கும் மனப்பாங்கு செல்லையா இராசதுரைக்கு எப்போதும் இருந்தது. அதனால் தந்தை செல்வாவின் கருத்துக்கு மதிப்பளித்து அவர் தலைவர் தெரிவில் போட்டியிடாமல் தவிர்த்தாலும் அமிர்தலிங்கத்துக்கும், இராசதுரைக்கும் பொதுவாக ஒற்றுமை *1973*, க்கு பின்னர் இருக்கவில்லை.

*1976* மே *14* ல் தமிழர் கூட்டணி என்ற பெயர் தமிழர் விடுதலை கூட்டணி என மாற்றப்பட்டு வட்டுக் கோட்டை பன்னாகத்தில் தமிழீழ தனியரசு தீர்மானத்தை தந்தை செல்வா எடுத்தார் இந்த தீர்மானத்தை முழுமனதாக ஏற்று அகில இலங்கை தமிழ்காங்கிரஷ்தலைவர் கணபதி காங்கேசர் பொன்னம்பலம், (ஜி.ஜி.பொன்னம்பலம்) இலங்கைத்தொழிலாளர் காங்கிரஷ் தலைவர் சௌமிய மூர்த்தி தொண்டமான் ஆகியோர் கைதட்டி அந்த தீர்மானத்தை நிறைவேற்றினர் அதற்கான மக்கள் ஆணை அடுத்த தேர்தலில் பெறுவோம் என அந்த கூட்டத்தில் தந்தை செல்வா கூறினார் கலந்து கொண்ட மக்கள் அனைவரும் அதனை வரவேற்று ஆரவாரம் செய்தனர்.

*1977* பெப்ரவரி *09* ல் வட்டுக்கொட்டை தீர்மானத்தை ஏற்ற ஜி.ஜி.பொன்னம்பலம் மரணித்தார். *1977* ஏப்ரல் *26* ல் வட்டுக்கோட்டை தீர்மானத்தை எடுத்த தந்தை செல்வா மரணித்தார்.

தந்தை செல்லவா மரணித்தபின்னர் சரியாக மூன்று மாதங்களால் *1977* ஜூலை *21* ல் பொதுத்தேர்தல் தமிழர் விடுதலை கூட்டணி உதயசூரியன் சின்னத்தில் வட்டுக்கோட்டை தீர்மா னத்தை தேர்தல் விஞ்ஞாபத்தில் முன்னிறுத்தி வடகிழக்கில் *23* தொகுதிகளில் வேட்பாளர்கள் நியமித்தனர் அதில் *18* தொகுதிக ளில் தமிழர் விடுதலை கூட்டணி வெற்றி பெற்று வட்டுக்கோட்டை தீர்மானத்திற்கு அங் கீகாரம் கிடைத்தது இலங்கையில் இரண்டாவது கட்சியாகவும் அந்த தேர்தல் முடிவுகள் வந்த மையால் எதிர்கட்சி தலைவராக அ.அமிர்த லிங்கம் தலைவரானார்.



தொடர்ச்சி 18ஆம் பக்கம்



# பெருந்தோட்ட சமூகத்தின் மீது விழுந்த பேரிடி

## நிவாரணமும் காணி உரிமையும்

**மருதன் ராம்**

மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் மக்கள், இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் தேயிலை உற்பத்தியில் ஈடுபடுகின்றர். இருப்பினும், இவர்கள் வரலாற்று ரீதியாகவும், அமைப்பியல் ரீதியாகவும் பின்தங்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். சமீபத்தில் இந்த பகுதிகளை உலுக்கிய டிற்வா புயல், இந்தப் பழைமையான சமூகத்தின் அடிப்படைப் பிரச்சினைகளையும், நிவாரண விநியோகத்தில் உள்ள ஆழமான கட்டமைப்புச் சிக்கல்களையும் மீண்டும் வெளிச்சத்திற்குக் கொண்டுவந்துள்ளது.



புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி சென்றடைவதில் உள்ள மிகப்பெரிய தடையாக, இவர்களுக்குச் சொந்தமாகக் காணி உரிமை இல்லாதது அமைந்தது. டிற்வா புயல், பலத்த காற்று மற்றும் கனமழையுடன் மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளைத் தாக்கியது. இதனால், பல லயன் வீடுகள் *(Line Rooms)* சேதமடைந்தன. உட்கட்டமைப்புகள் அழிந்தன. இந்தப் பாதிப்பினால் ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்தனர். 630க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். நூற்றுக் கணக்கானோர் காணாமல் போனார்கள்.

இடம்பெயர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் அரசாங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட தற்காலிக நிவாரண முகாம்களில் தஞ்சமடைந்தனர். ஆனால், நிவாரணச் சிக்கல் முதலில் இங்கேயே ஆரம்பமானது. பெரும்பாலான பாதிக்கப்பட்ட குடும்பங்கள், அதிகாரப்பூர்வ முகாம்களுக்குச் செல்லாமல், அருகிலுள்ள வீடுகளில் வசிக்கும் தங்கள் உறவினர்கள் அல்லது நண்பர்களின் வீடுகளிலும் அல்லது தற்காலிகப் பாது காப்பான இடங்களிலும் தஞ்சம் புகுந்தனர்.

அரசாங்கத்தின் நிவாரண மற்றும் இழப்பீட்டுப் பதிவுகள் பெரும்பாலும், முகாம்களில் முறையாகப் பதிவு செய்யப்பட்டவர்களை மட்டுமே சார்ந்திருப்பதால், உறவினர் வீடுகளில் தங்கியிருந்தவர்கள் பாதிக்கப்பட்டோர் பட்டியலில் முழுமையாக இணைக்கப்படவில்லை. இதனால், அவர்களுக்குச் செல்ல வேண்டிய அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் நிதி நிவாரணம் ஆகியவை உரிய முறையில் சென்றடையவில்லை என்ற கடுமையான குற்றச்சாட்டு எழுந்தது.

பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவிகள் சென்றடையாததற்குக்கள அளவிலும் பல நடைமுறைச் சிக்கல்கள் இருந்தன. இதன்படி, மழைக் காலங்களில் மோசமான சாலைகள், நிலச்சரிவு அபாயங்கள் மற்றும் தகவல் தொடர்பு துண்டிப்பு ஆகியவற்றால், கள ஆய்வாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்ட தொலைதூரத் தோட்டப் பகுதிகளைச் சென்றடைய முடியவில்லை. இதனால், சேதங்களின் உண்மையான விபரம் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் சரியான எண்ணிக்கை குறித்த துல்லியமான தரவு அரசாங்கத்தை அடையவில்லை. பெருந்தோட்ட நிர்வாக அமைப்பு, கிராமசேவகர் பிரிவுகளின் *(Grama Niladhari Divisions)* நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டிலிருந்து சற்றே மாறுபட்டு இயங்குவதால், தேசிய ரீதியிலான நிவாரணத் திட்டங்களை இந்தச் சமூகத்தினரைச் சென்றடையச் செய்வதில் நிர்வாக மட்டத்தில் தாமதங்கள் ஏற்பட்டன. மேலும், தோட்டத் தொழிலாளர்கள் அல்லாதவர்கள் நிவாரணம் பெறுவதில் அதிகளவு பாரபட்சத்தை எதிர்கொண்டனர்.



அதேபோன்று டிற்வா புயலின் பாதிப்புக்குப் பிறகு, மலையகச் சமூகம் நிவாரணம் மறுக்கப்படுவதற்கும், நிரந்தர வீடமைப்பு இல்லாமல் தவிப்பதற்கும் மூலக் காரணம், அவர்களுக்குச் சொந்தமாகக் காணி உரிமை இல்லாததே ஆகும். இது ஒரு வரலாற்று ரீதியான அநீதியாகும். தோட்டத் தொழிலாளர்கள் வசிக்கும் ‘லயன் வீடுகள்’ அல்லது அவர்களுக்கு அமைக்கப்பட்ட வேறு வீடுகள்கூட, சட்டப்படி தோட்ட நிறுவனங்களுக்குச் சொந்தமான காணியில் அமைந்துள்ளன.

அனர்த்தத்தினால் ஒரு வீடு முற்றிலுமாக அழிந்தால், அரசாங்கமோ அல்லது சர்வதேச உதவி அமைப்புகளோ புதிய வீட்டை நிர்மாணிப்பதற்கான நிதி இழப்பீட்டை வழங்கும்போது, விண்ணப்பதாரர் தங்கள் வீட்டின் காணிக்குச் சட்டபூர்வமாகச் சொந்தக்காரராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையை விதிக்கின்றன. காணி உறுதிப் பத்திரங்கள் இல்லாததால், டிற்வா புயலால் வீடுகளை இழந்த குடும்பங்கள், நிதியுதவி கோருவதற்கான அடிப்படைச் சட்டபூர்வ ஆவணமே இல்லாத நிலையில் தள்ளப்பட்டனர். இதன் காரணமாக, நிவாரணம் கோரி விண்ணப்பித்த பலர், ஆவணங்கள் இல்லை என்ற ஒரே காரணத்துக்காக நிராகரிக்கப்பட்டனர். இது அவர்களுக்குக் குறுகிய கால நிதி நிவாரணம் கிடைப்பதையும் பாதித்ததுடன், நிரந்தரமான மற்றும் பாதுகாப்பான புதிய வீடுகளைப் பெறுவதற்கும் மிகப்பெரிய தடையாக அமைந்தது. அவர்கள் மீண்டும் அனர்த்த அபாயம் நிறைந்த அதே பழைய லயத்திலேயே வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.




டிற்வா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணம் அடிப்படை நிர்வாக அலகான கிராம உத்தியோகத்தர் ஊடாக வழங்கப்படுகின்றன. இருப்பினும், இலங்கையின் பொதுப் பகுதிகளில் (கிராமிய, நகர்ப்புறம்) உள்ள கட்டமைப்பிற்கும், மலைநாட்டுப் பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள கட்டமைப்பிற்கும் இடையே வரலாற்றுப் பின்னணி, சமூக-பொருளாதாரத் தேவைகள் மற்றும் சேவை வழங்கல் அணுகுமுறை ஆகியவற்றின் அடிப்படையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்படுகின்றன.

நாட்டின் ஏனைய பகுதிகளில், கிராம உத்தியோகத்தர் பிரிவே அரசாங்க நிர்வாகத்தின் பிரதான அலகு ஆகும். இங்கு கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலகத்தின் கீழ், அரசின் சேவைகளை மக்களுக்கு நேரடியாக வழங்குகிறார். இந்த நிர்வாக அமைப்பானது பரந்த அரச கட்டமைப்பின் ஒரு பகுதியாக

தொடர்ச்சி 20ஆம் பக்கம்

# இலங்கையின் டிற்வா பேரழிவு:
## இந்தியாவின் மீட்பு நடவடிக்கை மற்றும் மறைந்து நிற்கும் புவிசார் அரசியல்



சட்டவாளர் **ஆதி** தமிழகம்

நவம்பர் 27 அன்று இலங்கையை தாக்கிய டிற்வா சூறாவளி, பருவமழையுடன் இணைந்து வட, கிழக்கு, மத்திய மாகாணங்களை முன்பு காணாதளவு பாதித்தது. பல மாவட்டங்கள் நீரல் மூழ்கி, ஆயிரக்கணக்கான வீடுகள் அழிந்து, இலங்கை அரசு அவசரநிலையை அறிவிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதிகாரப்பூர்வ தகவலின்படி 300 பேருக்கு மரணச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன; ஆனால் உண்மையான உயிரிழப்பு எண்ணிக்கை 600-ஐ கடந்திருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த எண்ணிக்கைகள் டிற்வாவின் தாக்கம் எவ்வளவு கொடூரமானது என்பதை தெளிவாக காட்டுகின்றன.



பேரிடர் உச்சத்தில் இருந்த நேரத்தில், இலங்கை பாதுகாப்பு அமைப்புகள் பெரும் இயலாமையை வெளிப்படுத்தின. கடற்படை மற்றும் விமானப்படை இரண்டும் போதிய உபகரணங்கள் இல்லாததால் ஆரம்ப கட்ட மீட்பு நடவடிக்கைகளில் திணறின. இதனால் இலங்கை அரசு உடனடியாக வெளிநாட்டு உதவியை நாடியது -அந்த வெற்றிடத்தை இந்தியா மிக வேகமாக நிரப்பியது.



இந்தியா பெரும்பரிமாண மீட்பு நடவடிக் கையை தொடக்கத்திலேயே முன்னெடுத்தது. விமானம் தாங்கி கப்பல்கள், கடற்படை மீட்புக் குழுக்கள், மருத்துவ அணிகள் மற்றும் நிவாரணப் பொருட்கள் அனைத்தும் சில மணி நேரங்களில் இலங்கைக்கு அனுப்பப்பப்பட்டன. பாகிஸ்தான் விமானங்களும் அன்றே கொழும்பில் இறங்கின; இருந்தாலும் இந்தியாவின் நடவடிக்கை தளரவில்லை. இதனால் இலங்கை மக்களிடையே இந்தியாவுக்கு மீண்டும் ஒரு நம்பிக்கை உருவானது. ஆனால் இந்த அதிவேக தலையீட்டை வெறும் மனிதநேய உதவியென மட்டுமே பார்ப்பது தவறாகும்; அதன் பின்னணியில் தெளிவான புவிசார் நோக்கமும் காணப்படுகிறது.



உலக அரசியல் தற்போது மிகப்பெரிய மாற்றத்தைக் கண்டுவருகிறது. அமெரிக்கா தலைமையிலான ஒற்றைத் துருவ உலக ஒழுங்கு சிதறிக்கொண்டிருக்கிறது. ரசியா–உக்ரைன் போர், ஈரான்–இசுரேல் முறுகல், சீனா–தைவான் பதற்றம் போன்ற பல அசைவுகள் தெற்காசியத் தளத்திலும் அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன. இந்த மாற்றங்கள் இந்தியாவின் நீண்டகால மூலோபாயத்தையும் சிக்கலாக்கியுள்ளன. ஒருகாலத்தில் சீனாவே இந்தியாவின் பிரதான சவாலாக இருந்த நிலையில், இன்று அதற்கு மேலாக அமெரிக்க பொருளாதார அழுத்தங்கள், மாலத்தீவு–பங்களாதேஷ்–நேபாளம் வழியாக மேற்கத்திய செல்வாக்கு, இலங்கை மீது வெளிநாட்டு அரசியல் புகுத்தல் என மூன்று திசைகளில் சவால்கள் உருவாகியுள்ளன.

இலங்கை–இந்தியா உறவு கடந்த சில ஆண்டுகளில் பல்வேறு காரணங்களால் தடுமாறிய நிலையில், டிற்வா பேரிடர் இந்தியாவுக்கு ஒரு புதிய வாய்ப்பை உருவாக்கியது. உதவி நடவடிக்கைகளின் மூலம் இந்தியா தனது செல்வாக்கை மறு நிறுவல் செய்ய முயன்றது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. "பெரிய ண்ணன் மனநிலை" என விமர்சிக்கப்பட்ட அணுகு முறை மெலிந்து காணப்பட்ட நிலையில், இந்த மீட்பு நடவடிக்கைகள் இந்தியாவின் பிராந்திய முன்னிலை மீண்டும் செயல்படுகிறதா என்ற கேள்வியையும் எழுப்புகின்றன. இந்த முயற்சிகள் நீண்டகாலத்தில் இந்தியாவின் புவிசார் நிலையை இலங்கையில் உறுதிப்படுத்துமா என்பது வருங் கால அரசியல் மாற்றங்களால் முடிவாகும்.



இன்றைய உலக அரசியல் மிகப்பெரிய திருப்புமுனையில் உள்ளது. பல நாடுகள் ஒற்றைத் துருவ ஆதிக்கத்திலிருந்து விலகி புதிய கூட்டணிகளை உருவாக்கும் நிலையில், இந்தியா வும் தனது நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்து வருகிறது. டிற்வா பேரிடருக்கான இந்தியாவின் விரைவு தலையீடு, அதன் புதிய மூலோபாய சிந்தனையின் வெளிப்பாடு. ஆனால் இந்தியா–இலங்கை உறவுகள் முந்தையபடி நிலையான, நம்பகமான வடிவத்தை எட்டுமா என்று இந்தியாவுக்கே தெரியாது. தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை இந்தியா இனி வரும் காலங்களில் எப்படி அணுகுவது என்று இந்தியா இன்னும் முடிவு எடுக்க வில்லை என்பதையே இந்தியாவில் சமீபத்திய மீட்பு நடவடிக்கையில் தெரிகிறது. இந்திய வெளிவிவகார துறையில் இன்று வரை அரசியல் குழப்பம் தொடர்கிறது..

• • •

# அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற அனைத்துலக மனித உரிமைகள் நாள் கண்காட்சி

சர்வதேச மனித உரிமைகள் நாளை முன்னிட்டு, ஆஸ்திரேலியாவின் கிரான்வில்லில் டிசம்பர் 7, 2025 அன்று நடைபெற்ற மனித உரிமைகள் தின நிகழ்வில் ஈழத்தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசுகள் மேற்கொண்ட இனப்படுகொலை மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான புகைப்பட கண்காட்சி தமிழர் ஏதிலிகள் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த நிகழ்லிவில் கலந்து கொண்ட பலர் நேரிடையாகவும், காணொளி ஊடாகவும் உரையாற்றியிருந்தனர் அந்த உரைகளின் தொகுப்பை இங்கு தருகின்றோம்.

ஆஸ்திரேலியாவின் அகதிக் கொள்கைகளை அரசியல் அமைப்பிற்குள் இருந்து மாற்றுவதற்காகச் செயல்படும் ஒரு வலையமைப்பான லேபர் ஃபார் ரெஃபீஜீஸில் ஒரு அர்ப்பணிப்புள்ள வழக்கறிஞராகவும் முன்னணி குரலாகவும் லாரன் ஹான்கோப் (Lauren Honcope) பேசும்போது மனிதாபிமான, கொள்கை ரீதியான சீர்திருத்தத்திற்கான அவசரத் தேவையை எடுத்துரைத்தார், மேலும் இனப்படுகொலை, துன்புறுத்தல் மற்றும் அரசு வன்முறையிலிருந்து தப்பி ஓடியவர்களின் வாழ்ந்த அனுபவங்களால் தேசிய முடிவெடுப்பது வடிவமைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.



தமிழ் அகதிகள் மன்றத்தின் செய்தித் தொடர்பாளர் ரேணுகா இன்பகுமார், பேசுகையில், 1948 முதல் இன்று வரை நமது மக்களுக்கு எதிராக நடந்து வரும் இனப்படுகொலையை பட்டியலிட்டிருந்தார்.

இனப்படுகொலை என்பது ஒரு குறிப்பிட்ட நிகழ்வு அல்ல அல்ல. அது ஆவணப்படுத்தப்பட்டு, பதிவு செய்யப்பட்டு, தற்போது நிகழ்ந்து வருகின்றது என்பதை அவர் நமக்கு நினைவூட்டினார். இலங்கை அரசு மேற்கொண்ட இனப்படுகொலைகள், மனிதப்படுகொலைகள், வான்வழி குண்டு வீச்சுகள், கட்டாயமாக காணாமல் போதல்கள், பாலியல் வன்முறை, நிலஅபகரிப்புகள், இராணுவமயமாக்கல் மற்றும் 2009 ஆம் ஆண்டு இனப்படுகொலையின் உச்சக்கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வேண்டு மென்றே அழிக்கப்பட்டவை உள்ளிட்ட ஈழத் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனப்படுகொலை நடவடிக்கைகளுக்கான ஆதாரங்களை நாங்கள் காட்சிப்படுத்தியுள்ளோம்.




ஈழத் தமிழர்கள் என்ற நமது அடையாளத்தையும், நமது தாயகம் வடக்கு கிழக்கில் அமைந்துள்ள தமிழ் ஈழம் என்றும் ரேணுகா மீண்டும் உறுதிப்படுத்தினார், அங்கு ஆக்கிரமிப்பு மற்றும் அழிப்பு மூலம் இனப்படுகொலை தொடர்கிறது, தலைமுறை தலைமுறையாக நம் மக்களை இடம்பெயர்வு மற்றும் அதிர்ச்சியில் தள்ளுகிறது.

நாம் அனைவரும் தலைமுறைகளின் சுமையைச் சுமந்து வருகின்றோம், ஈழத் தமிழர்கள் சரணடையவில்லை, அமைதியாக இருக்க மாட்டார்கள் என்பதை நமக்கு நினைவூட்டுகிறோம். எங்கள் கோரிக்கைகள் மாறாமல் உள்ளன: இனப்படுகொலையை இடம்பெற்றதை ஏற்றுக்கொள்ளுதல், எங்கள் மக்களுக்கான பாதுகாப்பு மற்றும் நீதி ஆகியவற்றை வேண்டி நிற்கின்றோம் என அவர் தெரிவித்திருந்தார்.




இனப்படுகொலை மற்றும் முறையான மனித உரிமை மீறல்களுக்கு பதிலளிப்பதில் நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் அரசியல் பொறுப்பின் முக்கியத்துவத்தை NSW சட்டமன்ற உறுப்பினர் அந்தோணி டி'ஆடம் எடுத்துரைத்தார்.

பாதிக்கப்பட்ட சமூகங்களின் பாதிப்புக்களை கேட்பதிலும், சங்கடமான உண்மைகளை எதிர்கொள்வதிலும் அரசாங்கங்களின் பங்கைப் பற்றி அவர் பேசினார், குறிப்பாக அரசு வன்முறை, இடப்பெயர்ச்சி மற்றும் நீண்டகால அநீதி தொடர்ந்து மறுக்கப்படும் அல்லது குறைக்கப்படும் இடங்களில். அரசியல் நலன்களை விட மனித கண்ணியத்தை மையமாகக் கொண்ட கொள்கை ரீதியான தலைமையின் தேவையை அவரது பங்களிப்பு வலுப்படுத்தியது.




அரச வன்முறை, அகதிகள் கொள்கை மற்றும் ஈழத் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் தொடர்ச்சியான இனப்படுகொலை குறித்து நேர்மையுடனும் நீண்டகால அர்ப்பணிப்புடனும் இயன் ரிண்டூல் பேசினார்.

இனப்படுகொலையில் இருந்து தப்பி ஓடுவோரை குற்றவாளிகளாக்கும் அதே வேளையில், குற்றவாளிகள் பொறுப்புக்கூறலில் இருந்து தப்பிக்க அனுமதிக்கும் கட்டமைப்புகளை பல தசாப்த கால ஆதரவை அடிப்படையாகக் கொண்டு அவர் குற்றம் சுமத்தியிருந்தார். வன்முறை, தடுப்புக்காவல் மற்றும் நாடுகடத்தல் ஆகியவை இனப்படுகொலையிலிருந்து தனித்தனியானவை அல்ல அவை அதன் நீட்சிகள் என்பதை அவரது வார்த்தைகள் நமக்கு நினைவூட்டின.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் விரிவுரையாளரும், இராணுவ மற்றும் அரசியல் ஆய்வாளருமான கலாநிதி ரவி பிரபாகரன் லண்டனில் இருந்து காணொளி ஊடாக தனது நுண்ணறிவுகளைப் பகிர்ந்து கொண்டார்.

அவரது செய்தியில், ஈழத் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் தொடர்ச்சியான இனப்படுகொலை குறித்து அவர் தெளிவாகப் பேசினார், அரச வன்முறை, இராணுவமயமாக்கல் மற்றும் அடக்குமுறையை ஒரு பரந்த அரசியல் மற்றும் இராணுவ சூழலில் உள்ளதை குறிப்பிட்டிருந்தார். இனப்படுகொலை எவ்வாறு போரின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது, ஆனால் அதிகார கட்டமைப்புகள், மறுப்பு மற்றும் சர்வதேச மௌனம் மூலம் அது எவ்வாறு தொடர்ந்து இடம்பெறுகின்றது என்பதை அவர் எடுத்துரைத் தார்.



அரச வன்முறை, பொறுப்புக்கூறல் மற்றும் ஈழத் தமிழ் மக்கள் எதிர் கொள்ளும் தொடர்ச்சியான இனப்படுகொலை ஆகியவற்றின் யதார்த்தங்களை ஜேக் லிஞ்ச் நேர்மையுடனும் தார்மீக தைரியத்துடனும் பேசினார்.

அவரது கருத்துக்கள்மௌனம் மற்றும் இனப்படுகொலைகளை மறைக்கும் முயற்சிகளை சுட்டிக்காட்டின, குண்டுகள் வீசுவதை நிறுத்தும்போது இனப்படுகொலை முடிவடையாது. அது மறுப்பு, தண்டனையின்மை மற்றும் உண்மையை அழிப்பதன் மூலம் தொடர்கிறது என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. பாதிக்கப்பட்ட சமூகங்களின் சாட்சியங்களை கேட்பதன் முக்கியத்துவத்தையும், அதிகாரத்தை நேர்மையுடன் எதிர்கொள்வதன் முக்கியத்துவத்தையும் அவர் உறுதிப்படுத்தினார்.

மனித கண்ணியம், பொறுப்புக்கூறல் மற்றும் இனப்படுகொலை மற்றும் முறையான அநீதிக்கு பதிலளிக்க வேண்டிய அவசரத் தேவை குறித்து தார்மீக தெளிவுடன் செனட்டர் மெஹ்ரீன் ஃபருக்கி பேசினார்.

அவரது வார்த்தைகள் பாதிக்கப்பட்ட சமூகங்களின் வாழ்ந்த அனுபவங்களை மையமாகக் கொண்டிருந்தன, மேலும் அரசியல் மொழி மற்றும் அசௌகரியம் மூலம் இனப்படுகொலை தொடர்ந்து மௌனமாக்கப்படுவதை சவால்

தொடர்ச்சி 20ஆம் பக்கம்

# பூட்டினின் இந்திய பயணமும் பறிபோன பலாலி வான்படைத்தளமும்




வேல்ஸில் இருந்து **அருஸ்**

ரஸ்யாவின் அதிபர் விளமிடீர் பூட்டீனின் இந்திய பயணம், வரலாற்றில் முதல் முறையாக அமெரிக்காவின் இராட்சத இராணுவ சரக்கு விமானம் யாழ்ப்பாணத்தில் உள்ள பலாலி அனைத்துக விமானநிலையத்தில் திடீரென இறங்கியது பூகோள அரசியலில் புதிய ஒரு அத்தியாயத்தை அமெரிக்கா எழுதப்போவதற்கான காரணமாக அமைந்துள்ளதாக இராஜதந்திர வட்டாரங்களில் பேசப்படுகின்றன.



இலங்கைக்கு 2 மில்லியன் டொலர்களை வழங்கிவிட்டு அமைதியாக இருந்த அமெரிக்கா, பூட்டீனின் விமானம் இந்தியாவில் இருந்து கிழம்பிய மறுநொடி இலங்கையில் இந்தோ-பசுபிக் பிராந்திய கட்டளை மையத்தின் படையினரை ஏற்றிக்கொண்டு வந்து விமானங்கள் தரையிறங்கியுள்ளது.

அமெரிக்க படையினரின் 36வது தற்செயல் மீட்புக் குழுவைச் சேர்ந்த இரண்டு அமெரிக்க விமானப்படை C130J சூப்பர் ஹெர்குலஸ் விமானங்கள் கட்டுநாயக்க விமானப்படை தளத்தில் தரையிறங்கி, இலங்கையின் நிவாரண நடவடிக்கைகளுக்கு தேவையான விமானப் போக்குவரத்து மற்றும் தளவாட உதவிகளை வழங்கியிருந்தது. இந்த நிகழ்வில் அமெரிக்க தூதர் ஜூலி சுங் மற்றும் இலங்கை படை அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர்.



அமெரிக்க படை குழுவில் குவாம் மற்றும் பிற பிரிவுகளில் இருந்து செயல்படும் 36வது CRGயின் அமெரிக்க விமானப்படை வீரர்கள். அமெரிக்க விமானப்படையின் 374வது ஏர்லிஃப்ட் பிரிவு (யோகோட்டா விமானத் தளம், ஜப்பான்) மற்றும் அமெரிக்க மரைன் கார்ப்ஸின் III மரைன் எக்ஸ்பெடிஷனரி ஃபோர்ஸ் (ஒகினாவா, ஜப்பான்) ஆகியவை அடங்கும்.

இந்த சவாலான நேரத்தில் அமெரிக்கா இலங்கையுடன் உறுதியாக நிற்கிறது, மீட்பு மற்றும் மறுகட்டமைப்பு முயற்சிகளை ஆதரிப்பதில் உறுதியாக உள்ளது.'' ''சாலைகளால் பயணம் செய்ய முடியாத நிலை இருக்கும்போது, விமானப் பயணமே உயிர்நாடியாக மாறும்,'' என்று அமெரிக்கதூதரக மூத்த பாதுகாப்பு அதிகாரி மற்றும் பாதுகாப்பு இணைப்பாளரான மேத்யூ ஹவுஸ் கூறினார். C130J சூப்பர் ஹெர்குலஸ் என்பது ஒரு கடின உழைப்பாளி விமானமாகும், பாதகமான நிலைகள் மற்றும் குறுகிய விமான ஓடுபாதைகள் உள்ள இடங்களில் அத்தியாவசிய சரக்குகளை விரைவாகவும் நம்பகத்தன்மையுடனும் நகர்த்துவதற்காக உருவாக்கப்பட்டது. இலங்கை ஆயுதப் படைகளுடனான எங்கள் வழக்கமான கூட்டுப் பயிற்சிகள் வலுவான உறவுகளை உருவாக்கியுள்ளன, மேலும் சூறாவளி டிற்வா போன்ற நெருக்கடிகளில் ஒன்றாக வேலை செய்யும் திறனை மேம்படுத்தியுள்ளன என அமெரிக்க தளபதி மேலும் தெரிவித்திருந்தார்.

அமெரிக்காவின் இந்த விமானங்கள் கட்டுநாயக்காவில் இறங்கியது வழமையான ஒன்று ஆனால் பலாலியில் இறங்கியது தான் மிகப்பெரும் பேசுபொருளாகியுள்ளது. அது அனுராதபுரம் மற்றும் அம்பாறை பகுதிகளுக்கும் சென்றுள்ளது. சாம்பல் நிற விரைவான விமானம் இலங்கை முழுவதும் சுழன்று திரிந்ததன் காரணம் என்ன?



இந்தியாவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான RELOS ஒப்பந்தம் தான் இந்த நிலைக்கான அடிப்படைக் காரணம். இரு நாடுகளும் பரஸ்பர பரிமாற்ற தளவாட ஆதரவு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளன. இது இருதரப்பு இராணுவ தளவாட ஒப்பந்தமாகும், இது இரு நாடுகளின் ஆயுதப்படைகளும் பல்வேறு தளவாட ஆதரவு சேவைகளுக்காக ஒருவருக்கொருவர் இராணுவ வசதிகளை அணுக அனுமதிக்கிறது.

அதாவது ரஸ்யாவின் நாசகாரி கடற்படைக் கப்பல்கள் இனிமேல் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சுதந்திரமாக நடமாட முடியும். மும்பைத் துறைமுகத்தில் அது எரிபொருளை நிரப்பும், கொச்சின் துறைமுகத்தில் அது திருத்த பணிகளை மேற்கொள்ளும். அந்த கப்பல்களின் ரடார் மற்றும் ஏவுகணை வீச்சுக்குள் அரபிக் கடலில் உள்ள அமெரிக்க தளங்கள், கடற்படைக் கப்பல்கள் இந்து சமுத்திரப்பிராந்தியத்தில் உள்ள அமெரிக்கத் தளங்கள் மற்றும் கடற்படைக் கப்பல்கள் அனைத்தும் வந்துவிடும்.

இரண்டாவது உலகப்போரின் முடிவுக்கு பின்னர் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஏற்படப் போகும் மிகப்பெரும் படைவலுச் சமநிலை மாற்றம் இது.

**RELOS ஒப்பந்தத்தின் முக்கிய விதிகள் என்பது**

- ***பரஸ்பர வசதி அணுகல்: இது இந்தியா மற்றும் ரஷ்யாவின் இராணுவ அமைப்புகள், போர்க்கப்பல்கள் மற்றும் இராணுவ விமானங்கள் ஒருவருக்கொருவர் தளங்கள், துறைமுகங்கள் மற்றும் விமானநிலையங்களைப் பயன்படுத்த அனுமதிக்கிறது.***

- ***தளவாட ஆதரவு: இதில் எரிபொருள் நிரப்புதல், பராமரிப்பு, பழுதுபார்ப்பு மற்றும் கப்பல்கள் மற்றும் விமானங்களுக்கான நிறுத்துமிடம் போன்ற சேவைகள் அடங்கும்.***



இந்த உடன்பாட்டின் மூலோபாய முக்கியத்துவம் என்பது, இது இந்தியாவிற்கு வடக்கு கடல் பாதை (ஆர்க்டிக்) மற்றும் பசிபிக் பகுதியில் உள்ள ரஷ்ய கடற்படை துறைமுகங்கள் மற்றும் விமான தளங்களுக்கு இந்தியா அணுகலை வழங்குகிறது. இதுஇந்தியக்கடற்படையின்செயற்பாட்டுஎல்லை மற்றும் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்திற்கு அப்பால் உள்ள நீரில் அனுபவத்தை கணிசமாக விரிவுபடுத்துகிறது.

இது ரஷ்யாவிற்கு அந்தமான் தொடக்கம் நிக்கோபார் கட்டளை மூலோபாய மையங்கள் உட்பட இந்தியப் பெருங்கடல் பிராந்தியம் (SCO) முழுவதும் உள்ள இந்திய இராணுவ நிறுவல்களுக்கு ரஷ்யாவிற்கு அதன் உலகளாவிய இராணுவ நிலையை மேம்படுத்துகிறது.



INDRA பயிற்சிகள் போன்ற கூட்டுப் பயிற்சிகளின் போது இயங்குநிலை மற்றும் ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதன் மூலம் நீண்டகால பாதுகாப்பு ஒத்துழைப்பை இது

தொடர்ச்சி 17ஆம் பக்கம்



# பன்னாட்டுச் சமூகத்தின் நடத்தையை மீளவடிவமைக்கும் தென் பூகோளம்

தமிழில்: **ஜெயந்திரன்**

பன்னாட்டுச் சூழமைவில் ஏற்பட்டுள்ள பாரிய மாற்றங்களின் பின்னணியில், உலக அரங்கில் தென் பூகோளத்தின் செயற்பாடுகள் தொடர்ந்து அதிகரித்த வண்ணம் இருக்கின்றன. இவ்வாறு தென் பூகோளத்தின் குரல், உலக அரங்கில் இன்று முன்னரைவிட அதிகமாகக் கேட்கத் தொடங்கியிருக்கிறது. சீனாவின் குவாங்சூ மாகாணத்தின் குவாங்ஸ_ நகரில், திங்கட்கிழமையிலிருந்து புதன்கிழமை வரை நடைபெற்ற, 2025ம் ஆண்டுக்கான இம்பீரியல் ஸ்பிறிங்ஸ் பன்னாட்டு மன்றத்தில், தென் பூகோளத்தின் எழுச்சி, பூகோள ரீதியான ஆட்சியை எவ்வாறு புதிதாக வடிவமைக்கிறதென்றும், எவ்வாறான அனுபவங்களை சீனா கொடுக்க முடியும் என்பது தொடர்பாகவும், தென் பூகோளத்திலுள்ள மூன்று நாடுகளின் மூன்று மேனாள் தலைவர்கள் பகிர்ந்து கொண்ட பார்வைகளை இங்கே தருகின்றோம்.

### ஜிக்மி யோசர் தின்லி - பூட்டானின் மேனாள் பிரதம மந்திரி

விசேடமாக பூகோள ஒழுங்கமைப்புகள் தொடர்ச்சியாக மாற்றமடைந்து கொண்டிருக்கும் இக்காலப் பகுதியில் பன்னாட்டுச் சமூகத்தின் நடத்தையை ஏற்கனவே தென் பூகோளம் மீள வடிவமைக்கத் தொடங்கிவிட்டது. இந்தத் தொடர் செயற்பாட்டில், உத்வேகமூட்டும் சீனத் தலைமைத்துவத்தில் தென் பூகோளத்தின் கூட்டுக்குரல் காத்திரமான விடயமாகின்றது. அனைவரும் ஒன்றிணைந்து, நீதியான, எல்லோரையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற, செயற்றிறன்மிக்க ஒரு பன்னாட்டு ஒழுங்கமைப்பை நாங்கள் கட்டியெழுப்ப முடியும்.



சீனா பெற்றுக்கொண்ட அனுபவத்திலிருந்து கிடைத்த பாடங்கள் அனைத்தையும் நாங்கள் பட்டியலிடுவோமாயின், எமக்குப் பல மணித்தியாலங்கள் தேவைப்படும். அதற்குக் காரணம் என்னவென்றால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளைப் பொறுத்தவரையில், சீனா மேற்கொண்ட விடயங்கள் அனைத்துமே முன்னுதாரணத்துக்குரியவை. உங்களது இலக்குகள் உயர்வாக இருக்குமாயின் மலையின் உச்சியை நிச்சயமாக நீங்கள் சென்று சேரலாம். சீனா தொடக்கத்தில் சந்தித்த சவால்களை எண்ணிப் பார்க்கும் போது, இவ்வாறான குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை சீனா அடையும் என்பதை மிகச் சிலரே எதிர்பார்த்திருக்க முடியும். இங்கே நாங்கள் கற்றுக்கொள்ளக்கூடிய விடயங்கள் அதிகமாக இருக்கின்றன. ஆனால் இங்கே முக்கியமாகக் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் நல்ல தலைமைத்துவமும் நல்ல ஆட்சியும் ஆகும்.




நல்லாட்சி என்பது மேற்குலகில் உள்ள சனநாயகத்தை ஒத்திருக்க வேண்டும் என்று சிலர் வாதிடலாம். உண்மையில் நல்லாட்சி எந்தவொரு குறிப்பிட்ட மாதிரியையும் பின்பற்ற வேண்டியதில்லை என்பதை சீனா மிகவும் தெளிவாகக் காட்டியிருக்கிறது. குறிப்பிட்ட ஒழுங்கமைப்பு மக்களுக்கு நன்மை பயக்கின்றதா என்பதுடன் மக்களின் நல்வாழ்வை அது மேம்படுத்துகின்றதாஎன்பதே முக்கியமானவையாகும். இப்படிப் பார்க்கும் போது சீனா இவற்றைச் செய்துகாட்டியிருக்கிறது.

நல்ல தலைமைத்துவம் நல்லாட்சிக்கு இட்டுச்செல்கிறது. அதிகாரிகள் பொறுப்புக்கூறக் கூடிய ஒரு நிலையில் இருக்கும் பொழுது, இரண்டுமே செயற்றிறன்மிக்கவையாக உருவெடுக்கின்றன. சீனாவைப் பொறுத்தவரையில் பொறுப்புக்கூறல் என்பது கட்சியிலிருந்து தோன்றுகிறது. தேர்தலின் ஊடாக வரும் பொறுப்புக்கூறலை விட இது சிறந்ததாகும். அபிவிருத்தியடைந்துவரும் பல நாடுகளைப் பொறுத்தவரையில், உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் தற்சீர்திருத்தம் ஆகிய விடயங்கள் மிகவும் எடுத்துக் காட்டானவையாக அமைந்துள்ளன.

### ஹோர்கே பெர்னாண்டோ குயிறோகா - மேனாள் பொலிவிய அதிபர்

பூகோள அரசாட்சியைப் பொறுத்த வரையில் இந்த நூற்றாண்டு வியக்கத்தக்க மாற்றங்களைக் கொண்டுவந்திருக்கிறது. முற்றிலும் மாறுபட்ட உலகத்திலே நாங்கள் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அப்படிப் பார்க்கும் பொழுது, முன்னரைவிட நல்ல நிலையில் நாம் இருக்கிறோம். ஜி7 அமைப்பை விட ஜி20 அமைப்பு மிக அதிகமான செல்வாக்கைச் செலுத்துவதோடு, அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இருக்கிறது. ஜி 20 அமைப்பில் எங்கள் எல்லோருக்குமே அதாவது எங்கள் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் உட்பட (மெக்சிக்கோ, பிறேசில், ஆர்ஜெந்தீனா போன்ற இலத்தீன் அமெரிக்க நாடுகள்) மேசையில் அமருவதற்கான ஆசனங்கள் உள்ளன. இவ்வாறான ஒழுங்கமைப்பு சிறந்ததாகும். அதற்கான காரணம் என்னவென்றால், எங்களது பார்வைகளுக்கு இங்கே இடம் இருப்பதோடு அவை கணக்கிலெடுக்கப்படுகின்றன.




காட்சிகள் மிகவும் விரைவாக மாற்றமடைந்துகொண்டிருக்கின்றன. இருபத்தோராம் நூற்றாண்டின் தொடக்கத்தில், மேற்குலகமே புதிய விடயங்களை அறிமுகப்படுத்;தியது. சீனா அவற்றைப் பின்பற்றிச் செயற்படும். அந்த நிலை தற்போது மாறிவிட்டது. இப்போது சீனாவே புதிய விடயங்களை அறிமுகப்படுத்துகின்றது. மேற்குலகத்தை விட இன்னும் அதிக வேகத்தில் அது அறிமுகப்படுத்திக்கொண்டிருக்கிறது. தூய்

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

## மனித உரிமை .. . தொடர்ச்சி ...

பொறி முறையினை காவல்துறை முன்னெடுத்து வருகின்றது. தடுப்புக் காவலில் உயிரிழந்தவர் தற்கொலை செய்ததாகவும் அல்லது முன்னர் சுகயீனமுற்றிருந்ததாகவும் ,தப்பி செல்லமுற்பட்ட போது ஏற்பட்ட விபத்தின் காரணமாக அல்லது பொலிசாரை தாக்க சென்ற போது சுட்டு கொலை செய்யப்பட்டார் போன்ற அதே காரணங்களை திரும்பவும் சொல்லி சொல்லி உயிரிழப்பு ஏற்படுகிறது. காவல்துறையினரால் பொது மக்கள் சித்திரவதை செய்யப்படுவதாகவே கூறப் படுகிறது.

இதனை மாற்ற வேண்டும். இது தொடர்பிலும் எவ்வித முன்னேற்றங்களும் ஏற் பட்டதாக தெரியவில்லை.சட்டங்கள் சரியாக நடை முறைப்படுத்தப்பட்டு அதற்கான அணுகு முறைகள் மாற்றப்படுவது மிக முக்கியம். இதனுடன் பயங்கரவாத சட்டம் தொடர்புபட்டுள் ளது. நீதித் துறையின் கண்காணிப்பு இங்கு குறை வாகவுள்ளது இதனால் இச் சட்டம் நீக்குவது பற்றி கூறப்படுகிறது.

அது போன்று அவசர கால சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டதன் தேவை நியாயப் படுத்தவில்லை எதிர்க் கட்சிகள் பாராளுமன்றில் உரையாற்றினர் இதன் அழுத்தமே அநுர குமார இதனை செய்தாரா... இயற்கை இடர் தொடர்பான சட்டங்கள் இருந்தபோதிலும் இச் சட்டம் தேவையா என்பது பற்றி மனித உரிமைகள் செயற்பாட்டாளரால் கேள்வி எழுப்பப்ட்டிருத்து .அதிலும் பிரகடன ஒழுக்கு விதி முறைகள் உள்ளது. ஒட்டுமொத்தமாக கருத்து சுதந்திரத்தை அடக்கவே இது பொது மக்களுக்கு ஏற்படுத்தப்பட்டது. கருத்து வெளியிடும் சுதந்திரம் ,ஊடக அடக்கு முறையும் இதனோடு இருப்பதை காணக்கூடியதாக உள்ளது என்றார்.

“சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் எமது உறவுகள் எங்கே எனவும் அரசியல் கைதிகளுக்காக விடுதலையை வலியுறுத்தியும் பௌத்தமயமாக்கலுக்கு எதிராகவும் பல வாசகங்களை ஏந்தியவாறு போராட்டங்களை முன் னெடுத்தனர்.

இவ்வாறான நிலையில் இது குறித்து கடத்தப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் திருகோணமலை மாவட்ட தலைவி செபஸ்டியன் தேவி தெரிவிக்கையில் “ எங்கள் உணர்வுகளையும் உரிமைகளையும் ஆட்சிக்கு மாறி மாறி வருகின்ற எந்த அரசாங்கமும் மதிப்பதில்லை இதனால் சர்வதேசமே நீதியை பெற்றுத்தரவேண்டும். உள்நாட்டுப் பொறி முறை மீது எமக்கு நம்பிக்கை இல்லை சர்வதேச பொறி முறை ஊடாக நீதியை நிலை நாட்டுங்கள். காணாமல் போன எங்கள் உறவுகள் எங்கே. எமது குரலை பொருட்படுத்தாமல் செம்மணி மனித புதை குழிக்கான காரணங்களை கண்டறியவும் உண்மையை நிலைநாட்டவும் ஆளும் அரசாங்கம் முன்வர வேண்டும். போராடி போராடி கண்ணீர் வடித்து பலதாய்மார்கள்உயிரிழந்துள்ளோம். மனித உரிமைகள் தினம் என்பது வெறும் பெயரளவில் மாத்திரமே உள்ளது. நிம்மதியாக வாழ முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

இவர் போன்ற தாய் தனது மகனை தேடி பல வருடங்களாக அலைந்து வருகிறார். இராணுவமே தனது மகனை கடத்திச் சென்றதாக அழுத கண்ணீரு டன் கூறியிருந்தார். கிழக்கில் காணாமல் போன உறவுகளுக்கான சங்கம் ஊடாக பலர் இணைந்து தொடர்ந்தும் போராடியும் வருகின்ற னர்.

வடக்கு கிழக்கில் தொல்பொருள் என்ற போர்வையில் தமிழர்களின் காணி அபகரிப்பு, புத்தர் சிலை நிறுவுதல் போன்றன உரிமைகளை கேள்விக்கு உட்படுத்தியுள்ளது.

குறிப்பாக யுத்த காலத்தில் இடம் பெற்ற மனித உரிமைகளுக்கு நியாயமான விசா ரணை தேவை, காணாணல் போனோர், யுத்த காலங்களில் பாதிக்கப்பட்டோர், ஊடக சுதந்திரம், அநியாயமான பயங்கரவாத தடை சட்ட கைது, அரசியல் கைதிகளின் விடுதலை போன்றன தற்காலத்தில் ஒட்டுமொத்த உரிமைகளை மனித உரிமைகளுக்கான தீர்வாக காண்பதில் இழுபறி நிலையில் உள்ளது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்குமுன்புகூறியவிடயங்கள்மறுக்கப்பட்டு வருகின்றன. இதனால் சிறுபான்மை சமூகங்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. இனவாதத்திற்கு இடமில்லை இனவாதங்களை தூண்டுவோர் யாராக இருந்தாலும் கைது செய்யப்படுவார்கள் என கூறினாலும் தமிழ் பிரதேசங்களில் புத்தர் சிலைகளை நிறுவி இனவாத கருத்துக்களை பேசுவோர் மீது நடவடிக்கை எடுக்க தயங்குவது ஏன்?

இவ்வாறான நிலையில் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று கூறும் நிலை இல்லாமல் இருக்கிறது. இது குறித்து திருகோண மலையை சேர்ந்த சிவில் சமூக செயற் பாட்டாளர் த.கிரிசாந் தெரிவிக்கையில் “கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் தற் போதைய அரசாங்கம் மக்களுக்கு ஊழலற்ற ஆட்சியை போதைப்பொருளற்ற எல்லோருக் கும் பொதுவான வழங்கும் நோக்கில் செயற் பட்டாலும் மனித உரிமை மீறல்கள் என்ற விடயம் தொடர்ந்த வண்ணமே உள்ளது. ஊழல் தடுப்பு மற்றும் போதைப்பொருள் ஒழிப்புக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுத்த போதிலும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் கடந்த கால ஆட்சியாளர்களை போலவே தற்போதுள்ளவர்களும் நடந்து கொள்கின்றனர்.

குறிப்பாக இலங்கையில் எண்ணிக்கையில் குறைவான தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான செயற்பாடுகள் ஆங்காங்கே தொடர்ந்து வருகின் றன. அண்மையில் திருகோணமலை கடற்கரை பகுதியில் சட்டவிரோதமான முறையில் உரு வான விகாரை சிறந்த உதாரணமாகும். இந்த விடயத்தில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்டனர். நீதிப் பொறிமுறை பக்கச் சார்பாக செயற்பட்டது. இது போன்று திருகோண மலை முத்துநகர் மக்களின் காணி அபகரிப்பும் இலங்கையில் வாழும் எண்ணிக்கையில் குறைவான மக்களுக்கு எதிராக இடம்பெறும் மனித உரிமை மீறல்களுக்கு சிறந்த சான்றுகளாக அமைகின்றன. இவ்வாறு சட்ட விரோதமாக செயற்படும் துறவிகள் இன்றுவரை எந்தவொரு தண்டனைக்கும் உட்படுத்தப்படுவதில்லை.

மட்டக்களப்பில் மக்களை வெட்டி எறி வேன் என அச்சுறுத்திய தேரருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்ட போதிலும் இன்று வரை கைது செய்யப்படவில்லை. மாறாக சிறு குற்றங் களை செய்யும் தமிழ் பேசும் இளைஞர்கள் இருவர் கைதாகி இறந்த இரண்டு சம்பவங்கள் அண்மையில் இடம்பெற்றுள்ளன. எனவே இலங்கையைப் பொறுத்தவரை அரசு மற்றும் அரச திணைக்களங்களான பொலிஸ், தொல்லியல் திணைக்களம், துறைமுக அதிகார சபை போன்றன பாரபட்சமான முறையில் செயற்பட்டு வருவது டன் மனித உரிமை மீறல்கள் பலவற்றில் ஈடுபட்ட வண்ணமே உள்ளன.

எனவே மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற எண்ணக்கரு எமது நாட்டைப் பொறுத்தவரை பெரும்பான்மை என மார் தட்டிக் கொள்ளும் தனிமனிதர்கள் மற்றும் அதிகாரிகளின் மனதளவில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய மாற்றமாக அமைகிறது எனவும் தெரிவித்தார்.

ஒட்டுமொத்தமாக ஊடக சுதந்திரம் பறிக் கட்பட்டு ஊடகவியலாளர்கள் கூட பயங்கரவாத தடுப்பு பிரிவுக்கு விசாரணைக்கு அழைக்கப் பட்டு வருகிறார்கள். முல்லைத் தீவில் புகைப்பட ஊடகவியலாளர், திருகோணமலையில் இளம் ஊடகவியலாளர் என அண்மைய சம்பவங்கள் மனித உரிமைகள் விடயத்தில் கேள்விக்குறியாக்கி யுள்ளது.

சிறையில் அடைக்கப்பட்ட சகோதரர் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட முடியாது கருத்து சுதந்திரப் பறிக்கப்படுவதுள் அரசியல் கைதிகளை சிறையில் சந்திப்பதற்கு கூட பெரும் முயற்சி எடுக்க வேண்டும். பல வருடங்கள் கடந்தும் விடுதலை என்பது நினைத்து பார்க்க முடியாதுள்ளது. சிறையில் இறந்து போன வரலாறுகளும் உண்டு அத்தனையை சம் பவங்களும் மனித உரிமைகள் இந்த நாட்டில் இல்லை என்பதை எடுத்து காட்டுகிறது என்ற முடிவுக்கு வரலாம்.

• • •

## இலங்கையின்... தொடர்ச்சி ...

நிலையில் உள்ள 15,000 இற்கும் மேற்பட்டோரை அந்த இடங்களி லிருந்து வெளியேறுமாறு பிரதேச செயலகங்கள் ஊடாக அறிவுறுத்தப் பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், பொதுமக்கள் தற்போதைய நிலை மையைப் புரிந்துகொண்டு உரிய அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறும் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, அனுமதி பெறாத கட்டடங் கள் அல்லது ஏனைய வகை வீடுகளில் வசிப்பவர் கள் கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் வழங்கும் ஆலோசனைகளை முறையாகப் பின்பற்றுவது அவசியம் என வசந்த சேனாதீர தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட அனர்த் தங்களின் போது, மண் மேடுகள் சரிந்து விழுந்தமையாலேயே அதிகளவான உயிரிழப்பு கள் ஏற்பட்டுள்ளன என்றும், அது குறித்து மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

LENIO
Architectural Planning | Structural Design | Party Wall Agreement
Sadadcharam Easwaran (Easan)
BEng MSc DIC CEng C.BuildE MICE MCABE MFPWS
Director
+44 (0) 20 4558 8272
+44 (0) 7831 199 962
easan@leniogroup.com
www.leniogroup.com
5a St. James's Road
Croydon, CR0 2SB
ice cabe FPWS

## பூட்டீனின்... தொடர்ச்சி ...

வலுப்படுத்துகிறது. மேலும் இந்தியாவின் ஆயுதங்களுக்கு (சுகோய் ஜெட் விமானங்கள், T-90 டாங்கிகள், S-400 அமைப்புகள்) உதிரி பாகங்கள் விரைவாகக் கிடைப்பதற்கும் பராமரிப்பதற்கும் இது உதவுகிறது.

மேலும் ரஸ்ய ருடே என்ற ஊடகம் தனது தொலைக்காட்சி சேவையை இந்தியாவில் ஆரம்பித்துள்ளதுடன், ரஸ்யாவின் மிகப்பெரும் வங்கிகளில் ஒன்றான Sberbank வங்கியும் அதன் சேவையை மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. ஏற்கனவே ரஸ்யாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தகம் 90% உள்ளுர் நாணயங்களில் இடம்பெற்று வருகையில் இது அதனை மேலும் உறுதிப்படுத்தும். அது மட்டுமல்லாது எண்ணிக்கை வரையறுக்கப்படாத இந்திய தொழிலாளர்களை உள்வாங்கிக் கொள்ள பூட்டீன் இணங்கியுள்ளார்.

அதாவது ஏற்கனவே உள்ள "ரஷ்யா-சீனா வரம்பு இல்லாத கூட்டாண்மை" என்பது இரு நாடுகளுக்கும் இடையிலான விரிவான மூலோபாய உறவைக் குறிக்கிறது, இது உக்ரைன் மீதான முழு அளவிலான படையெடுப்பை ரஸ்யா மேற்கொள்வதற்கு சற்று முன்பு பிப்ரவரி 2022 இல் மேற்கொள்ளப்பட்டது.

சீனாவுடன் ரஸ்யா மேற்கொண்ட மூலோபாயக் கூட்டணி தற்போது இந்தியா வரை விரிவாக்கம் பெற்றுள்ளது. ரஸ்யாவின் இந்த எழுச்சி மேற்குலகத்திற்கான மிகப்பெரும் எச்சரிக்கை சமிக்கையாகும். அதிலும் இந்தியாவின் இணைவு என்பது இந்து சமுத்திரத்தை புரட்டிப்போடும் ஒரு சுனாமியை உருவாக்க போதுமானது. மாலைதீவில் சீன இருக்க, இலங்கையை யார் கைப்பற்றுவது என்ற போட்டிகள் ஆரம்பித்துள்ளன. அனர்த்த நிவாரணம் என்ற போர்வையில் இந்திய படையினர் மன்னார் வரை சென்றது அமெரிக்காவிற்கு அடிக்கப்பட்ட எச்சரிக்கை மணியாகும்.

இந்திய அமைதிப் படை காலத்தில் ஏற்பட்ட தவறுகளை இந்த டிற்வா புயல் மூலம் சரிப்படுத்த இந்தியா முற்பட்டிருந்தாலும், அமெரிக்க விமானத்தின் யாழ் வரவு என்பது எந்த சம்பவம் இடம்பெறக்கூடாது என இந்தியா கனவு கண்டதோ அது சடுதியாக நிகழ்ந்துவிட்டது. பலாலியில் அமெரிக்க இராணுவ விமானங்கள் இறங்கிவிடக்கூடாது என 1987 ஆம் ஆண்டு இந்தியா தனது இராணுவத்தை இறக்கி தமிழ் மக்களுக்கு எதிராக தனது ஆயுதங்களை திருப்பியிருந்தது. ஆனால் இன்று ஒரு துப்பாக்கி சூடு கூட இல்லாமல் அமெரிக்க விமானங்கள் பலாலியில் இறங்கியுள்ளன. இது இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கைக்கும், தமிழர்கள் மீதான காழ்ப்புணர்ச்சிக்கும் கிடைத்த பதிலாகும்.

• • •

## பாகிஸ்தானுடன் ... தொடர்ச்சி ...

அமெரிக்க பாதுகாப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு நிறுவனம் (DSCA) டிசம்பர் 8 அன்று காங்கிரசுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள் ளது.

"இந்த விற்பனை அமெரிக் காவின் வெளியுறவுக் கொள்கை மற்றும் தேசிய பாதுகாப்பு நோக்கங்களை ஆதரிக்கும், பாகிஸ்தான் அமெரிக்கா மற்றும் கூட்டாளிப் படைகளுடன் தொடர்ச்சியான பயங்கரவாத எதிர்ப்பு முயற்சிகளிலும் எதிர்கால தற்செயல் நடவடிக்கைகளுக் கானதயாரிப்பிலும் இணைந்து செயல்படுவதைத் தக்க வைத்துக் கொள்ள இது அனுமதிக்கும்" என்று DSCA கூறியது.

விற்பனையின் மதிப்பிடப்பட்ட மதிப்பு $686 மில்லியன். இந்த ஒப்பந்தம் தொழில்நுட்ப மற்றும் தளவாட ஆதரவு சேவைகள், ஆய்வுகள் மற்றும் கணக்கெடுப்புகளையும் வழங்குகிறது.

பாகிஸ்தான் 2021 இல் அதன் கடற்படையின் எப்-16 விமானங்களை மேம்படுத்தக் கோரியிருந்தது, ஆனால் அப்போது உறவுகள் மோசமடைந்ததால் வாஷிங்டன் அதன் பதிலை தாமதப்படுத்தியது.

இந்த ஒப்பந்தம் 30 நாள் மறுஆய்வு காலத்தைக் கொண்டுள்ளது மற்றும் அமெரிக்க சட்டமியற்றுபவர்களிடமிருந்து ஆய்வுக்கு உட்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, அதே நேரத்தில் இந்தியா இந்த முன்னேற்றங்களை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது என்று NDTV செய்தி வெளியிட்டுள்ளது.

ஜேவலின் ஏவுகணை அமைப்பு உட்பட $93 மில்லியன் ஆயுதங்களை இந்தியாவிற்கு விற்பனை செய்ய அமெரிக்கா ஒப்புதல் அளித்த சில வாரங்களுக்குப் பிறகு இந்த விற்பனை நடந்துள்ளதாக டைம்ஸ் ஆஃப் இந்தியா செய்தி வெளியிட்டுள்ளது.

ஏப்ரல் 22 அன்று இந்திய யூனியன் பிரதேசமான ஜம்மு-காஷ்மீரில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு, மே 7-10 தேதிகளில் தெற்காசிய அண்டை நாடுகள் ஒரு இராணுவ மோதலில் ஈடுபட்டன, அதில் 26 பேர் கொல்லப்பட்டனர். "நீண்ட பேச்சுவார்த்தைகளுக்குப்" பிறகு அணு ஆயுத நாடுகளுக்கு இடையே போர் நிறுத்தத்தை ஏற்படுத்தியதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் பலமுறை கூறியுள்ளார். புது தில்லி இந்தக் கூற்றுக்களை நிராகரித்துள்ளது.

## இஸ்ரேலியர்களை .. . தொடர்ச்சி ...

மூவரும் அடுத்து கிடைக்கக் கூடிய விமானத்தில் நாடு கடத்தப்பட்டனர்" இந்த நடவடிக்கையை "மனிதாபிமான மற்ற மற்றும் அதிர்ச்சிகரமான சம்ப வம்" என கானாவின் வெளியுறவு அமைச்சகம் கடந்த புதன்கிழமை(10) தெரிவித்தது.

"இஸ்ரேலிய அதிகாரிகளின் இந்த கண்டிக்கத்தக்க நடத்தை மிகவும் ஆத்திரமூட்டும், ஏற்றுக்கொள்ள முடியாத மற்றும் நமது நட்பு வரலாற்று உறவுகளுக்கு முரணானது" என்று அது குறிப்பிட்டது.

கானாவும் இஸ்ரேலும் முதன்முதலில் 1950களின் பிற்பகுதியில் உறவுகளை ஏற்படுத்திக் கொண்டன, 1973 ஆம் ஆண்டு யோம் கிப்பூர் போருக்குப் பிறகு உறவுகளைத் துண்டித்து, 1990களின் நடுப்பகுதியில் அவற்றை புதுப்பித்தன. செப்டம்பர் 2011 இல், இஸ்ரேல் 38 ஆண்டுகள் முடங்கிப்போன உறவுகளுக்குப் பிறகு அக்ராவில் உள்ள அதன் தூதரகத்தை மீண்டும் திறந்தது.

தூதர் இல்லாத நிலையில், கானா அதிகாரிகள் ஒரு மூத்த தூதரக அதிகாரியை வரவழைத்து, தங்கள் "வலுவான வார்த்தைகளில் அதிருப்தியை" தெரிவித்தனர்.

அதேசமயம் மூன்று இஸ்ரேலிய நாட்டினருக்கும் நுழைவு மறுப்பை அறிவித்தது. கானா பயணிகளின் கண்ணியத்தைப் பாதுகாக்க இந்த நடவடிக்கை அவசியம் என்று அது தெரிவித்துள்ளது.

## மக்களின் அரைப் ... தொடர்ச்சி ...

புதன்கிழமை (10) வெளியிடப்பட்ட இந்த ஆய்வு, உலக மக்கள்தொகையில் பத்தில் ஒரு பங்கு பணக்காரர்கள் இப்போது அனைத்து செல்வத்தி லும் முக் கால் பங்கை சொந்தமாகக் கொண்டிருப்பதால், அனைத்து வகைகளிலும் இந்த ஏற்றத்தாழ்வு பிரதிபலிக்கிறது என்று கூறுகிறது, அதே நேரத்தில் ஏழைகளாக உள்ள அரைவாசி மக்கள் வெறும் 2% மட்டுமே வைத்திருக்கிறார்கள்.

10% பேர் மீதமுள்ள 90% பேரை விட அதிகமாக சம்பாதிக்கிறார்கள், அதே நேரத்தில் ஏழைகள் பாதி பேர் உலக வருமானத்தில் பத்தில் ஒரு பங்கிற்கும் குறைவாகவே சம்பாதிக் கிறார்கள்"இதன் விளைவாக, ஒரு சிறிய சிறுபான்மையினர் முன்னோடியில்லாத வகையில் நிதி சக்தியைக் கட்டுப்படுத்தும் ஒரு உலகம் உருவாகிறது, அதே நேரத்தில் பில்லியன் கணக்கானவர்கள் அடிப்படை பொருளாதார ஸ்திரத்தன்மையிலிருந்து கூட விலக்கப்பட்டுள்ளனர்".

ஆராய்ச்சியின் படி, பாலின ஊதிய இடைவெளி "அனைத்து பிராந்தியங்களிலும் நீடிக்கிறது", பெண்கள் உலகளாவிய தொழிலாளர் வருமானத்தில் கால் பங்கிற்கு மேல் சம்பாதிக்கின்றனர், இது 1990 முதல் அரிதாகவே நகர்ந்துள்ளது.

பள்ளி வயது மாணவருக்கு சராசரி பொதுக் கல்விச் செலவு துணை-சஹாரா ஆப்பிரிக்காவில் ஆண்டுக்கு சுமார் $230 ஆகும், இது ஐரோப்பாவில் $8,600 மற்றும் வட அமெரிக்கா மற்றும் ஓசியானியாவில் $10,500 ஆகும், இது 40 முதல் 1 என்ற விகிதத்தை பிரதிபலிக்கிறது.

ஏழை நாடுகள் பணக்கார நாடுகளை நோக்கி சாய்ந்த உலகளாவிய நிதி அமைப்பால் பிழியப்படுகின்றன. முன்னேறிய பொருளாதாரங்கள் மலிவாகக் கடன் வாங்கி வெளிநாடுகளில் அதிக வருமானத்தைப் பெறலாம், இதனால் அவர்கள் "நிதி வாடகைதாரர்களாக" செயல்பட முடியும். உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 1% ஒவ்வொரு ஆண்டும் கடன் சேவை, இலாபத்தை திருப்பி அனுப்புதல் மற்றும் பிற நிதி ஓட்டங்கள் மூலம் ஏழை நாடுகளிலிருந்து பணக்கார நாடுகளுக்கு செல்கின்றது, இது உலகளாவிய வளர்ச்சி உதவியின் அளவை விட கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகம் என்று அறிக்கை மேலும் தெரிவித்துள்ளது.



## அமரர் செல்லை . .. தொடர்ச்சி ...

அந்த தேர்தல் பிரசாரக்கூட்டங்களில் தந்தை செல்வா தமிழீழத்தை பெற்றுத்தராவிட்டாலும் தாம் பெற்றுத்தருவேன் என சட்டத்தரணி எம். எச்.எம் அஷ்ரப் உரையாற்றியிருந்தார்.( அவர் 1981 ல் ஸ்ரீலங்கா முஷ்லிம் காங்கிரஷ் கட்சியை ஆரம்பித்தவர்)

தந்தை செல்வா 1977 ஏப்ரல் 26 மரணித்த பின்னர் செல்லையா இராஜதுரைக்கு உரிய கௌரவம் கட்சியில் வழங்கப்படவில்லை. தந்தை செல்வா இறந்தபின்னர் தலைமைப் பொறுப்புக்கு தகுதியாக இருந்த இராஜதுரை திட்டமிட்டவகையில் கட்சியால் ஒதுக்கப்படத் தொடங்கினார். கட்சியின் உருவாக்க காலத்தில் இருந்து தந்தை செல்வாவின் வலதுகையாக செயற்பட்டுவந்த இராஜதுரை தந்தை செல்வா மறைவை அடுத்து அவரை கட்சியில் இருந்து ஓரம் கட்டுவதற்கான சதிகள் மெதுமெதுவாக அதிகரித்தன.

அதன் வெளிப்பாடாக 1977 ல் தேர்தலில் அவரை வேட்பாளராக நிறுத்தி தோற்கடிப்பதற்கான சதியாக மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதியில் செல்லையா இராசதுரையை தமிழர் விடுதலை கூட்டணி உதயசூரியன் சின்னத்திலும்,கவிஞர் காசி ஆனந்தனை தமிழரசுக்கட்சி வீட்டுச்சின்னத்திலும் வேட்பாளரகளாக போட்டியிட வைத்தனர் பிரசார மேடைகளில் அ.அமிர்தலிங்கம், கோவை மகேசன், ஈழவேந்தன், மங்கையற்கரசி, மற்றும் யாழ்மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் காசி ஆனந்தனை ஆதரித்தே பேசினர் இராசதுரையின் பிரசார மேடைகளில் ஏறவில்லை ஆனால் அந்த தேர்தலிலும் செல்லையா இராசதுரை வெற்றிபெற்றார் காசி ஆனந்தன் தோல்விகண்டார்.

அ.அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலை கூட்டணி 1977ல் செய்த இரண்டு துரோகங்கள்!

1. செல்லையா இராசதுரையை தோற்கடிக்க கவிஞர் காசி ஆனந்தனை தமிழரசுக்கட்சி வீட்டுச்சின்னத்தில் வேட்பாளராக இறக்கியது.
2. மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதி உருவாக்கப்பட்டது தமிழருக்கு ஒரு ஆசனமும், முஷ்லிமுக்கு ஒருஆசனமும் கிடைப்பதற்காகவே. ஆனால் இரண்டு தமிழர்களை வேட்பாளராக நிறுத்தி முஷ்லிம் பிரதிநித்துவத்தை இல்லாமல் ஆக்க நினைத்தது .

இதன்தாக்கம் ஏனைய கல்முனை தொகுதி ஏம்.எம். சம்சுதீன், சம்மாந்துறை தொகுதி எச். எல்.எம் ஹாசீம், மூதூர் ஆகிய தொகுதிகளில் வேட்பாளராக போட்டியிட்ட மூன்று முஷ்லிம் வேட்பாளர்களும் தோல்விகண்டனர்.

அஷ்ரப் பிரசார பீரங்கியாக செயல்பட்ட போதும் அவருடைய கல்முனைத்தொகுதியில் கூட ஒரு முஷ்லிம் பிரதிநிதியை அவரால் வெற்றிபெற வைக்கவில்லை, அதற்கான அடிப்படை காரணம் மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதியில் குறிப்பாக காத்தான்குடியில் முஷ்லிம் ஆசனம் இழக்கும் நிலை ஏற்பட்டதை எந்த முஷ்லிம் மக்களும் ஏற்றவில்லை.

தமிழர் விடுதலை கூட்டணியின் சதியை அஷ்ரப்பும் தேர்தல் காலத்தில் உணர்ந்தமையால் 1977 செப்டம்பர் மாதம் தமிழர் விடுதலை கூட்டணியில் இருந்து விலகி 1981 ல் காத்தான் குடியில் ஸ்ரீலங்கா முஷ்லிம் காங்கிரஷ் கட்சியை முதன் முதலாக முஷ்லிம் இனம்சார்ந்த கட்சியாக ஆரம்பித்தார்.



1977ல் கல்முனை, சம்மாந்துறை, மூதூர் தொகுதிகளில் தமிழர் விடுதலை கூட்டணிக்கு எதிராக பிரசாரம் செய்த ஐக்கியதேசிய கட்சி உறுப்பினர்கள் மேற்கொண்ட முக்கிய பிரசாரம் ‘‘மட்டக்களப்பு இரட்டை அங்கத்துவ தொகுதியில் முஷ்லிம் பிரதிநித்துவம் வரக்கூடாது என தட்டி பறிக்கும் தமிழர் விடுதலை கூட்டணிக்கு வாக்களிக்கவேண்டாம்’’ என மேடைகளில் அவர்களுடைய பிரசாரம் முக்கியத்துவம் பெற்றதால் மூன்று தொகுதிகளிலும் முஷ்லிம் வேட்பாளர் எவருமே தமிழர் விடுதலை கூட்டணியில் தெரிவாகவில்லை.

அதேபோல் கல்குடா தொகுதியிலும் தமிழர் விடுதலை கூட்டணி வேட்பாளர் சம்மந்தமூர்த்திக்கு வாக்களிக்க இருந்த ஓட்டமாவடி முஷ்லிம்களில் பலர் ஐக்கிய தேசிய கட்சி தேவநாயகத்துக்கு வாக்களித்தமையால் கல்குடா தொகுதி தமிழர் விடுதலை கூட்டணி ஆசனம் இழக்கப்பட்டது.

செ.இராசதுரையை தோற்கடிக்க தமிழர் விடுதலை கூட்டணி எடுத்த சதியால் கிழக்கு மாகாணத்தில் எந்த ஒரு முஷ்லிம் உறுப்பினரும் வெற்றிபெறும் வாய்ப்பு இழக்கப்பட்டதுடன், ஸ்ரீலங்கா முஷ்லிம் காங்கிரஷ் கட்சி ஆரம்பிக்கவும் காரணமாகியது இந்த உண்மையை இதுவரை எந்த தமிழரும் கூறவில்லை நானே இப்போது முதல் முறையாக கூறியுள்ளேன்.

அமரர் செல்லையா இராசதுரை தமிழ் தேசிய அரசியலை மட்டக்களப்பு மாவட் டத்தில் காலூன்ற தந்தை செல்வாவுடன் அனைத்து அறவழிப்பொராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறையிலும் சுலமாதங்கள் இருந்த ஒருவர் 1979 ல் தமிழர் விடுதலை கூட்டணியில் இருந்து அவர் விலகி ஆளும் ஐக்கிய தேசிய கட்சியில் இந்து கலாசார அமைச்சர் பதவியை பெற்றார் அதன்பின்னர் மலேசிய தூதுவராகவும் கடமையாற்றியிருந்தார்.

• • •

## வெளிநாடுகளு ... தொடர்ச்சி ...

அதன் ஓரங்கமாக வெளிநாடு களுடனான சீன மக்கள் நட்பு றவுச் சங்கத்தின் தலைவர் யாங் வான்மிங்குக்கும் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத்துக்கும் இடை யிலான சந்திப்பு கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சில் நடை பெற்றது.

இதன்போது இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையில் நீண்டகாலமாக நிலவும் இருதரப்பு நல்லுறவை மேலும் விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

மேலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசியமான நிவாரண உதவிகளை வழங்குவதற்கென வெளிநாடுகளுடனான சீன மக்கள் நட்புறவுச் சங்கத்தின் சார்பில் 580,000 ஆர்.எம்.பி நிதியுதவிக்கான காசோலை அதன் தலைவர் யான் வான்மிங்கினால் அமைச்சர் விஜித்த ஹேரத்திடம் வழங்கிவைக்கப்பட்டது.

## ஊழலுக்கு எதிரா ... தொடர்ச்சி ...

பொதுமக்களின் ஆர்ப்பாட்டங் களை சந்தித்தது. கடந்த நான்கு ஆண்டுகளில் பல்கேரியா ஏழு தேசிய தேர்தல்களை நடத்தியுள் ளது.

கடந்த வாரம் அரசாங்கம் பட்ஜெட் திட்டத்தை வாபஸ் பெற்ற போதிலும், ஜெலியாஸ்கோவ் ராஜினாமாசெய்யவேண்டும்என்றும் பல செல்வாக்கு மிக்க அரசியல்வாதிகளை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்றும் போராட்டக்காரரர்கள் தொடர்ந்து கோரினர்.

வியாழக்கிழமை, ஜெலியாஸ்கோவின் அரசாங்கம் எதிர்க்கட்சிகளால் தாக்கல் செய்யப்பட்ட அதன் சமீபத்திய நம்பிக்கையில்லா தீர்மானத்தை எதிர்கொள்ள இருந்தது. இருப்பினும், வாக்கெடுப்பு நடைபெறுவதற்கு முன்பு, இந்த தீர்மானம் ஆளும் கூட்டணியால் தோற்கடிக்கப்படும் என்றாலும், தானும் தனது அரசாங்கமும் ராஜினாமா செய்வதாக பிரதம மந்திரி அறிவித்தார்.

பல்கேரிய அரசியலமைப்பின் கீழ் வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி ருமென் ராடேவ், அரசாங்கத்தின் ராஜினாமாவிற்கான கோரிக்கைகளை முன்னர் ஆதரித்தார். ஜெலியாஸ்கோவின் ராஜினாமாவைத் தொடர்ந்து, பாராளுமன்றத்தில் உள்ள கட்சிகள் ஒரு புதிய அரசாங்கத்தை அமைக்க ராடேவ் கோருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர்களால் அவ்வாறு செய்ய முடியாவிட்டால், புதிய தேர்தல்கள் நடத்தப்படும் வரை இடைக் கால நிர்வாகத்தை அமைக்கும் பணி அவருக்கு வழங்கப்படும்.

## எத்தனை காலம் ... தொடர்ச்சி ...

மண்சரிவு ஏற்பட வாய்ப்புள்ளதால், மண் மேடுகள் உள்ள இடங்களில் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் மண்சரிவு தொடர்பான ஆராய்ச்சிப் பிரிவின் பணிப்பாளர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.இதுவரை 215, இடங்கள் மண்சரிவு ஏற் பட்டதாக கூறப்படுகிறது

இவ்வாறு மலையக மக்களின் மண் சரிவு இழப்புகள் நீண்டு செல்கிறது. 2025, நவம்பர் அனர்த்தத்தின் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் பாதிக்கப்பட்ட மலையக மக்களிடம் மலையகத்தில் இருப்பிடங்களுக்கான காணி இல்லை எனில் வடக்கு கிழக்கில் குடியமர சம்மதம் என மகிழ்ச்சியுடன் கூறினார்.

2014, அக்டோபர்,29, ல் பதுளை மாவட்டத்தில் மண்சரிவால் 38, பேர் உயிரிழந்தபின்னர் ஒரு சந்திப்பின்போது அப்போது மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த பொ.செல்வராசா, பா.அரியநேத்திரன் (நான்), சீ.யோகேஷ்வரன் ஆகிய மூவரும் மலையகத்தை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கூறினோம் மலையக மக்களை மட்டக்களப்பில் குடியமர்த்த நீங்கள் முயற்சி செய்தால் நாங்கள் வரவேற்போம் அதற்கான ஆதரவை தருவோம், மட்டக்களப்பு மாவட்ட மக்களும் அதற்கு பூரண ஆதரவை தருவார்கள் என கூறியிருந்தோம் அதனை அவர்கள் ஏற்றனர் ஆனால் எந்த முயற்சியும் எடுக்கவில்லை 2014ல் அவர்களை வடகிழக்கில் குடியமர்த்தியிருந்தால் 2025 தற்போது ஏற்பட்டு நிர்க்கதியான மலையக மக்களை காப்பாற்றியிருக்கலாம்.

இப்போது அரசால் வீடுகட்டவும், காணி கொள்வனவு செய்யவும் நிதி ஒதுக்கப்படும் என கூறும் இந்த சந்தர்ப்பத்தில் குறுகிய அரசியல் லாபங்களை மறந்து மலையக மக்களின் உயிரை காப்பாற்றவேண்டுமானால் அவர்களை வடகிழக்கில் குடியமர்த்துவதே ஒரே தீர்வு.

இல்லைஎனில் இன்னும் ஒரு பேரழிவு மீண்டும் ஏற்பட்டால் மலையக மக்களை கடவுளாலும் காப்பாற்றமுடியாது என்பதே உண்மை. எனவே இன்னும் எத்தனை காலம்தான் மலையக மக்களை ஏமாற்றுவது..?
சிந்தியுங்கள்.

## பன்னாட்டுச் ... தொடர்ச்சி ...

மையான சக்தி, சாரதியற்ற போக்குவரத்து, மருந்துகளை உற்பத்திசெய்தல், செயற்கை நுண்ணறிவு போன்ற துறைகளில் மிகப்பெரும் மாற்றங்க ளைக் கொண்டுவரும்.

தென் பூகோளம் எழுச்சியடைந்து கொண்டிருக்கிறது. ஆனால் ஒவ்வொன்றும் வெவ்வேறான வேகத்தில் நகர்கின்றது. இலத்தீன் அமெரிக்காவைவிட, ஆசியா மிக விரை வாக வளர்ச்சியடைந்துகொண்டிருக்கிறது. ஆபிரிக்காவும் ஒரு வகையில் மெதுவாக நகர்ந்து கொண்டிருக்கிறது. ஆசியாவைப் பொறுத்தவரையில் சீனாவைப் போன்ற நாடுகளுக்கு ஒரு சிறப்பம்சம் இருக்கிறது. இலத்தீன் அமெரிக்காவைப் போல் அவை முன்னர் அபிவிருத்தியடைந்துகொண்டிருந்த நாடுகளாக இருந்தன. ஆனால் அவை இப்போது பூகோளத் தில் முக்கியமான பங்கை வகிக்கத் தொடங்கியிருக்கின்றன. இன்று அவை மிக அதிகமாக முன்னேற்றமடைந்திருக்கின்றன. இருப்பினும் நாம் தொடர்ந்து முன்னோக்கிச் செல்கின்ற பொழுது, இலத்தீன் அமெரிக்காவிலும் விசேடமாக ஆபிரிக்காவிலும் அடிப்படையான மாற்றங்கள் நிகழவிருக்கின்றன. இந்த நாடுகளில் சனத்தொகை இளையோரை அதிகமாகக் கொண்டிருக்கிறது. தொழில் புரிவோர் அதிக இயங்கு நிலையைக் கொண்டிருக்கிறார்கள். வேலைவாய்ப்புகள் தொடர்ச்சியாக அதிகரித்துக் கொண்டிருக் கின்றன. நாங்கள் சந்திக்கும் விடயங்களுக்கு முகங்கொடுக்க புத்தம் புதிய சிந்தனை அவசியமாக இருக்கிறது.

உதாரணத்திற்கு செயற்கை நுண்ணறிவை எடுத்துக்கொள்வோம். அபிவிருத்தியடைந்துவிட்ட நாடுகளில் செயற்கை நுண்ணறிவின் காரணமாகபெரும்எண்ணிக்கையில்தொழில்புரிவோர் வேலைகளை இழக்கலாம் என்ற நியாயமான பயம் காணப்படுகின்றது. ஆனால் அபிவிருத்தியடைந்து கொண்டிருக்கின்ற நாடுகளைப் பொறுத்தவரையில் வித்தியாசமான வாய்ப்புகள் தென்படுகின்றன. இப்போது எங்களிடம் தாதிகள், மருத்துவர்கள், சட்டத்தரணிகள் அல்லது திட்டமிடுபவர்கள் போதியளவில் இல்லை. இவ்வாறான எல்லாத் துறைகளிலும் செயற்கை நுண்ணறிவு சேவை வழங்கலை விரிவாக்கம் செய்ய செயற்கை நுண்ணறிவால் எமக்கு உதவ முடியும். அபிவிருத்தியடைந்துவிட்ட நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது, அந்த நாடுகளின் வளர்ச்சியை எட்டிப்பிடிக்க செயற்கை நுண்ணறிவு குறிப்பிடத்தக்க வகையில் உதவ முடியும். உண்மையில் வாய்ப்புகள் ஏராளமாக இருக்கின்றன. ஆனால் இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்துவது அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் வாழும் எங்கள் கைகளில் தான் இருக்கின்றன.

### ஓலுசேகுன் ஓபசான்யோ - நைஜீரியாவின் மேனாள் அதிபர்

முதல் தடவையாக, ஜி 20 மாநாடுதென்னாபிரிக்காவின் ஜொகன்னர்ஸ்பேர்க்கில் நடைபெற்றதன் காரணத்தால், நாங்கள் இதில் பங்குபற்றி, உரத்துப் பேசியதுமட்டுமன்றி, முடிவுகளைமேற்கொள்ளும் விடயத்திலும் நாங்கள் பங்கெடுத் திருக்கிறோம். ஆபிரிக்காவைப் பொறுத்த வரையிலும் தென் பூகோளத்தைப் பொறுத்தவரையி லும் இது முக்கியமான விடயமாகும். ஜி 20 அமைப்பையும் அதன் அங்கத்துவ நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியையும் பார்க்கிற பொழுது, அதன் முக்கியத்துவம் மறுக்கப்பட முடியாத வகையில் வெளிப்படுகிறது. தென் பூகோளத்தைப் பொறுத்த வரையில், ஒரு அமைப்பின் பகுதியாக இருப்பது முக்கியமானது. காரணம் இங்கே நாம் வெறும் இலக்கங்கள் அல்ல. முடிவுகளை மேற்கொள்ளுவதிலும் நாங்கள் பங்கெடுக்கின்றோம். பொருண்மிய ரீதியாகப் பார்க்கும் பொழுது இது மிகவும் காத்திரமானது. உலக நடப்புகளைப் பொறுத்தவரை இது ஒரு புதிய விடயமாகும். உலகம் இந்த மாற்றத்தைப் புறந்தள்ளிவிட முடியாது.

ஒரு புதிய பன்னாட்டு ஒழுங்கு, பல விடயங்களையும் காரணிகளையும் உள்ளடக்கியிருக்கும். இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட ஒழுங்கு விதிகளிலும் அமைப்புகளிலுமே தற்போதைய உலக ஒழுங்கு தங்கியிருக்கிறது. போருக்குப் பின்னரான உலக ஒழுங்கின் மைய அடையாளமாக இருக்கின்ற ஐக்கிய நாடுகள் கூட அந்தக் காலத்திலே தான் உருவாகியது. ஒரு புதிய உலக ஒழுங்கு பற்றி நாம் விவாதிப்பதாக இருந்தால், ஐக்கிய நாடுகள் மறுசீரமைப்புக்கு உள்ளாக்கப்பட வேண்டும். நாங்கள் இங்கே குறிப்பிட வேண்டும் முதல் விடயம் அதுவாகும்.

இரண்டாவது விடயம், ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பின் கீழ் உருவாக்கப்பட்ட ஏனைய அமைப்புகள் தொடர்பானது: உலக வங்கி, உலக நாணய நிதியம், யுனெஸ்கோ, உலக சுகாதார தாபனம் போன்றவை. ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்காக இவ்வாறான அமைப்புகள் உருவாக்கப்பட்டன. காலம் மாறிவிட்டது. தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கின்றது. எங்கள் பிராந்தியத்தில் நாங்கள் பின்வருமாறு சொல்கிறோம்: "மேளம் தனது தாளத்தை மாற்றும் பொழுது, நடன ஜதிகளும் அதற்கேற்றாற்போல மாற வேண்டும்." பன்னாட்டு அரங்கில் தாளம் மாறிவிட்டது. ஆகவே நடனமும் அதற்கேற்றாற்போல் மாறத்தான் வேண்டும். இந்த அமைப்புகளின் மறுசீரமைப்பில் ஓர் புதிய உலக ஒழுங்கு தோற்றம் பெறும். இங்கும் தென் பூகோளம் ஆற்ற வேண்டிய பெரிய பங்கு ஒன்று இருக்கிறது.

அந்த விடயங்கள் பற்றி சீனா நான்கு செயற்றிட்டங்களை முன்வைத்துள்ளது. பூகோளப் பாதுகாப்பு தொடர்பான செயற்றிட்டம், பூகோள அபிவிருத்தி தொடர்பான செயற்றிட்டம், பூகோள நாகரிகம் தொடர்பான செயற்றிட்டம், ஆகியவற்றுடன் பூகோள ஆட்சி தொடர்பான செயற்றிட்டம். இந்த முயற்சிகள் அனைத்துமே முக்கியமானவை. பாதுகாப்பு இன்றி அபிவிருத்தியை ஏற்படுத்த முடியாது. அமைதியின்றிப் பாதுகாப்பைக் கொடுக்க முடியாது. அமைதியைப் பேணுவதை அடிநாதமாகக் கொண்ட ஓர் ஆட்சி இல்லாது அமைதியைப் பேணிப்பாதுகாக்க முடியாது. இந்த நான்கு செயற்றிட்டங்களும் ஒன்றோடொன்று தொடர்புபட்டவை. அவற்றின் இலக்குகளை அடையும் வகையில் எவ்வாறு அவற்றை ஒன்றிணைத்து இயங்க வைக்கலாம் என்பதே இங்குள்ள முக்கிய விடயமாகும். இவை எல்லாவற்றிலும் தென் பூகோளம் ஆற்ற வேண்டிய விசேட பங்கு உண்டு. இந்தச் சிந்தனைகள் தென் பூகோளத்திலிருந்து வருமாயின் - சீனாவைப் பொறுத்தவரையில் அதுவே உண்மையாகும் - அப்படியென்றால் அதனை நடைமுறைக்குக் கொண்டு வரும் பணியும் தென் பூகோளத்தினால் தான் முன்னெடுக்கப்பட வேண்டும்.

**நன்றி: *globaltimes.cn***

## பாலா அண்ண . . தொடர்ச்சி ...

எமது மீனவ மக்கள் பரந்த கடலில் ஓடி சுறாவும், கருங்கண்ணி பாரையும் அள்ளி வரமுடியாதவாறு தடைவிதித்துவிட்டும், போராளிகள் விடுமுறையில் சென்று தம் பெற்றோர் சகோதரர்களுடன் கூடிக்குலவ முடியாத அழுத்தங் களை பிரயோகித்துக் கொண்டும்,

எம்மால் பேச்சு மேசையில் அமைதியாகப் பேச முடியாது.அங்கு பரிமாறப்படும் குளிர்பானத்தை மகிழ்ச்சியாக அருந்தமுடியாது. பல்சுவை உணவை ருசித்துச் சாப்பிட முடியாது. எனவே முதலில் இத்தகைய அனைத்து தடைகளும் விலக்கப்பட வேண்டும். எமது மக்கள் மனதில் நிம்மதியும், முகத்தில் மகிழ்ச்சியும் மலர வேண்டும்.

அதுதான் பேச்சுக்கான உகந்த சூழ்நிலையாக அமையும் என்பதில் தெளிவாகவும், உறுதி யாகவும் இருந்தார். எமது மக்களே எமது முதுகெலும்பு என்பது அவரது பரிவன்பின் அரசியல் மரபு. மக்கள் நேசம் மிக்கவர் பாலா அண்ணன்.

தேசக் கவிஞன் புதுவையின் பெரும் இரசிகன் அவர். யுத்தநிறுத்த அறிவிப்போடு போக்குவரத்து தடைநீக்கம், பொருண்மிய தடை நீக்கம், கடல் வலயச் சட்ட நீக்கம் என பலதடவைகள் கொண்டுவரச் செய்து, எமது மக்களுக்கும், போராளிகளுக்கும் அத்தகைய அரிய இளைப்பாறும் வாய்ப்பினைப் பெற்றுத் தந்தவர் நமது பாலா அண்ணன்.

இது நிபந்தனை அல்ல பேச்சுக்குமுன் ஏற்படுத்தப்பட வேண்டிய இயல்பு நிலை என்ற உண்மையின் குரல் அது. சர்வதேச போர் மரபை உலக அரங்கில் உரத்து உணர்த்திய தமிழீழ தேசத்தின் குரல் அது.

சிறீலங்காப் படையினரை முன்னேற விடாது ஐந்து கிலோமீற்றர் தூரத்தில் நிறுத்தி வைத்து, ஒரு அடி கூட நகரவிடாத இராணுவ பலத்துடன்தான் அவரது குரலின் துல்லியம் தொனித்தது.

கரையில் நின்று எட்டிப்பார்த்தால், வான விளிம்போடு ஒட்டிச்செல்லும் கடற்கலங்களின் வரிசையை, எறும்பு ஊர்ந்து செல்வது போன்ற நிலையினை ஏற்படுத்திய கடற் புலிகளின் அவர்கள் கிழித்து எழுப்பிய அலை யோசையாக பாலா அண்ணனின் குரல் மோதுகை இருந்தது.

மாவீரர்களின் களத்து முழக்கமும், வெற்றித் தெறிப்பும் பாலா அண்ணனின் குரலில் தெறிக்கும். மக்களின் அவல ஓலமும், இனத்தின் விம்மலும் பேச்சு மேசையில் அனலாய் தகிக்கும். தர்மத்தின் குரல் அது. நீதியின் குரல் அது. எங்கள் தேசத்தின் குரல் அது. மண்டைதீவு படைமுகாம் சிதைக்கப்பட்டதும், கையளவு இழப்புக்களோடு நூற்றுக்கும் அதிகமான படையினரைக் கொன்றொழித்து, பலநவீன ஆயுதங்கள் அள்ளிவரப் பட்டது.

தன்னிடம் வருகை தந்தவர்களிடம் பாலா அண்ணனின் கேள்வி. யாரடாப்பா செய்தது? அண்ணதான் என்பதே பலரது பதில். பாலா அண்ணன் திருப்தியடையவில்லை. அந்நேரம் சடுதியாக வந்து இறங்கிய, தலைவர் அவர்கள்.

பானு - கலக்கிப் போட்டான் என்ற பதில் மூலம் பாலா அண்ணன் இயல்பிற்கு வந்தார். தெரிந்த உண்மையை மறைப்பது என்பது, பாலா அண்ணனுக்கு எரிச்சலூட்டும் செயலாகவே இருக்கும்.

தலைவர் பெயரை பொருத்தமில்லாத இடங்களில் பிரேரிப்பது என்பது, தலைவருக்கு ஏற்படும் இழுக்காக கருதினார் பாலா அண்ணன். பலநூற்றாண்டு தாண்டியும் நிலைத்து ஓங்கும் கற்பனை ஹரிபாட்டரையும் மிஞ்சிய உயிரும், உணர்வும், உண்மையும் கலந்த அற்புத வரலாற்றுத் திரட்சியை தக்கவைக்க அவர் எடுத்த முயற்சியும், அவர் செய்த தவப் பிரயத்தனமும் அவரது உயிர் பிரிகையோடு சேர்ந்து அடங்கிப்போனது.

அவருக்கு நிகர் அவரே.. எஞ்சியோர் அவரை நிதானமாக கற்றுத் தேறுவதே சிறப்பு ஆலோசனை வேண்டி, ஆறுதல் தேடி ஓடுவதற்கு பாலா அண்ணை இன்று என்னுடன் இல்லை. என தலைவர் தனது ஆழ்மனத் துயரினை பகிர்ந்தமையானது அவரது வெற்றிடம் பற்றிய கனதியை உணர்த்தப் போதுமானது. இதனூடே புதியதேசம் பிறகும் என்பது தான் தேசத்தின் குரல் எமக்குத் தந்து சென்ற நம்பிக்கை.

## பெருந்தோட்ட... தொடர்ச்சி ...

எளிதாகச் செயற்படுகிறது. ஆனால், மலையக பெருந்தோட்டப் பகுதிகளில், நிர்வாக அமைப்பு மிகவும் சிக்கலானது. எனினும் வரலாற்று ரீதியாக, பெருந்தோட்டப் பகுதிகள் தனியான சட்டங்களின் கீழ் தோட்ட நிர்வாகத்தால் கட்டுப்படுத்தப்பட்டு வந்தன. இதனால், அரசின் பொது நிர்வாகக் கட்டமைப்பான கிராம உத்தியோகத்தர் அமைப்பு, நேரடியாக மக்களின் வாழ்விடங்களுக்குச் சென்றடைவ தில் தாமதமும் சவால்களும் இருக்கின்றன.

பெருந்தோட்டங்களில், தோட்ட முகாமையாளர்களின் அதிகார வரம்புகள் மற்றும் கிராம உத்தியோகத்தர் அதிகார வரம்புகள் சில சமயங்களில் ஒன்றுடன் ஒன்று குறுக்கிடும் நிலை காணப்படுவது ஒரு முக்கிய சவாலாகும். கிராம உத்தியோகத்தரின் அடிப்படைப் பணி பொதுவானதாக இருந்தாலும், பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள சமூகத்தின் தனித்துவமான தேவைகள் காரணமாக, அவரது சேவையின் முக்கியப் பகுதிகள் வேறுபடுகின்றன.

டிற்வா புயல், மலையகச் சமூகத்தின் மீது ஒரு இரட்டைக் காயத்தை ஏற்படுத்தியுள்ளது. முதலாவதாக, இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட சேதம். இரண்டாவதாக, அரசாங்கத்தின் நிவாரண விநியோகத்தில் உள்ள பாரபட்சம் மற்றும் கட்டமைப்புச் சிக்கல்கள். இந்தச் சமூக மக்கள் கண்ணியத்துடனும், பாதுகாப்பிலும் வாழ வேண்டுமானால், நிவாரண விநியோகப் பொறிமுறைகளைத் தற்காலிக முகாம்களுக்கு வெளியே உறவினர் வீடுகளில் தங்கியுள்ளவர்களையும் உள்ளடக்கும் வகையில் மாற்றியமைக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்களுக்கு அடிப்படை மனித உரிமையான காணி உரிமையை உடனடியாக உறுதிப்படுத்துவதன் மூலமே, எதிர்காலப் பேரழிவுகளில் இருந்து அவர்கள் நிரந்தரமாக மீண்டு வர முடியும். மலையக மக்களின் நீண்டகாலத் துயரங்களுக்குக் காணி உரிமையே அடிப்படைத் தீர்வாக அமையும்.

• • •

## அவுஸ்திரேலி... தொடர்ச்சி ...

செய்தன. மனித உரிமைகள் என்பது சுருக்கமான கொள்கைகள் அல்ல, அவை வாழ்ந்த யதார்த்தங்கள், குறிப்பாக துன்புறுத்தல், இடப்பெயர்ச்சி மற்றும் அரசு வன்முறையை எதிர்கொள்ளும் சமூகங்களுக்கு என்பதை அவர் நமக்கு நினைவூட்டினார்.

நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் இனப்படுகொலையை எதிர்கொள்ளும் அரசாங்கங்களின் பொறுப்புகள் குறித்து நேர்மையுடனும் தெளிவுடனும் செனட்டர் டேவிட் ஷூபிரிட்ஜ், பேசினார்.

அவர் பாதிக்கப்பட்ட சமூகங்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து பேசியிருந்தார். அரசு வன்முறையை அதன் பெயராகக் குறிப்பிடுகிறார், மேலும் அரசியல் நலன்களுக்காக உண்மையை நீர்த்துப்போகச் செய்யவதை அவர் சாடியிருந்தார். இனப்படுகொலை மற்றும் தொடர்ச்சியான அடக்குமுறை பெரும்பா லும் மொழியால் மென்மையாக்கப்படும் அல்லது முற்றிலும் புறக்கணிக்கப்படும் நேரத்தில், அவரது குரல் முக்கியமானது.

• • •







## செய்தியில் மீள்... தொடர்ச்சி ...

உதவுகின்றன, மேலும் முதலீட்டு வாரியம் இதை ஊக்குவிக்கிறது. சுருக்கமாக, இலங்கைக்குக் கிடைக்கும் உதவிகள், அதன் பொருளாதார நிலை மற்றும் இயற்கை அனர்த்தங்களைப் பொறுத்து, நாடுகளின் அரசாங்கங்கள், சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் புலம்பெயர் சமூகம் ஆகியவற்றிலிருந்து வருகின்றன.

தென்னிலங்கை மலையகத்தை தவிர சீரற்ற காலநிலை, கனமழை மற்றும் புயல் காரணமாக இலங்கையின் வடகிழக்கு மாகாணத்தில் உள்ள யாழ்ப்பாணம் (வடமராட்சி கிழக்கு) மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்கள் உட்பட பல்வேறு பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன; குறிப்பாக, நாகர்கோவில், ஆழியவளை, நெற்காணி நிலங்கள், மீனவர்கள், மற்றும் தினக்கூலித் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர், மேலும் மண்சரிவு அபாய எச்சரிக்கைகளும் விடுக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட முக்கிய இடங்கள் மற்றும் பாதிப்புகள் யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் கிழக்கு மற்றும் ஆழியவளை பகுதிகளில் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணம் (பொதுவாக) மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை கனமழை, வெள்ளம், காரணமாக மாவிலாறு அணைக்கட்டு உடைவால் மூதூர் பிரதேச செயலக பிரிவும் மண்சரிவு பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்டுவருகிறது.

ஆனால் விவசாயம் நெற் செய்கை விவசாய நிலங்கள் பெரிதும் சேதமடைந்துள்ளன.

மீன்பிடித் துறை மீனவர்கள் கடலுக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது தொழிலாளர்கள் தினக்கூலித் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் என்பன எந்தவகையில் ஈடு செய்யமுடியும் என்பதும் சிந்திக்கவேண்டும் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது, மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

தற்போதைய நிலை (டிசம்பர் 2025) சீரற்ற காலநிலை ஓரளவு குறைந்து வந்தாலும், வடகீழ் பருவப்பெயர்ச்சி மழை தொடர்வதால் அபாயங்கள் நீடிக்கவாய்ப்புள்ளதால் மீள்கட்டுமானப்பணிகள் என்பது சீரமைக்க காலங்கள் செல்லும் வாய்ப் புள்ளது.

தேசிய மக்கள் சக்தி அரசின் ஜனாதிபதி அநுர மற்றும் அமைச்சர்கள் மீள் கட்டுமானம் பற்றிபலர் கூறுவதைப்பாதிப்புகளை எதிர்கொள்ள மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் நடைபெற்று வருகின்றன, எனினும் சில பகுதிகளில் பாதிப்புகள் தொடர்கின்றன.

அநுர அரசானது செய்தியில் மீள்கட்டமைப்பை செய்வதைவிட்டு செய்கையில் காட்ட வேண்டும் என்பதே பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கை.

• • •

## நிவாரணப் பொரு ... தொடர்ச்சி ...

லாளர்களுடன் இணைப்பை ஏற்படுத்தி இச் சேவையை, வொக் கோட் நிறுவனம், மக்கள் சேவை மன்றம் ஆகிய நிறுவனங்கள் நிவாரண உதவிகளை உரியவர் களுக்கு வழங்கின.

இதன் அடிப்படையில் கிண்ணியா பிரதேசத்தில் 50குடும்பங்களுக்கு மக்கள் சேவை மன்றம் நிறுவனமும், மூதூர் பிரதேசத்தில் 100 குடும்பங்களுக்கு வொக்கோட் நிறுவனமும், வெருகல் பிரதேசத்தில் 100 குடும்பங்களுக்கு அகம் நிறுவனமும் நிவாரணங்களை வழங்கியுள்ளன.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# தாயகமும் வாழ்வும்



